Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



பிரேம் அச்சகம்

127, KKS Road

யாழ்ப்பாணம்

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 07 வெள்ளிக்கிழமை (21.03.2014) பக்கங்கள் 20 ஓசை – 171

# சுதந்திரபுரத்தில் தேடுதல்; எவரும் கைதாகவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உடையார் கட்டு வடக்கில் சுதந்திரபுரம் பகுதியில் நேற்றுக் காலை படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதை அடுத்து விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவர் மீதான விசாரணை இன்னும் முடியவில்லை. ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காலை இந்தப் பகுதியில் படையினர் சோதனை நடத்தி 40 பேரை அந்தப் பகுதியில் உள்ள முன்பள்ளிக் கட்டடம் ஒன்றுக்கு விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றிருந்தனர். சுமார் 8 மணி நேர விசாரணைகளுக்குப் பின்னர் அவர்களில் 39 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் தடுத்து வைக்கப்பட்டு அவர் மீது விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனினும் அவர் மீது வழக்குப் பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா என்பது குறித்து நேற்றிரவு வரை தகவல் பெற முடியவில்லை.

அதேவேளை இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் குறித்து, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

அரசுக்கு விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள இரண்டு தமிழ் இளைஞர்களைத் தாங்கள் தேடி வருவதாகவும் அதற்காகவே இவ்வாறான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

அந்த இளைஞர்கள் பற்றி பொதுமக்கள் இராணுவத்தினருக்குத் தகவல்கள் வழங்கியுள்ளதுடன், புகைப்படங்களையும்

19 ஆம் பக்கம் பார்க்க


## வவுனியாவிலும் தேடுதல்

(வவுனியா)

வவுனியாவின் பிரதான கிராமங்களான பூந்தோட்டம், அண்ணாநகர், மகாறம்பைக்குளம், கருப்பனிச்சங்குளம் மற்றும் காத்தார்சின்னக்குளம் ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவத்தினர் நேற்று நண்பகல் வரை அதனைத் தொடர்ந்தனர்.

வீடுகளில் பட அல்பங்கள் சோதிக்கப்பட்டன. நள்ளிரவின் பின்னர் திடீரென இப்பகுதியில் ஆள் நடமாட்டம் காரணமாக வளர்ப்பு நாய்கள் குரைக்கத் தொடங்கியதால் ஊர் மக்கள் அச்சத்துடன் விழித்துக் கொண்டனர்.

நேற்றுக் காலை தமது கடமைகளுக்காக வீட்டிலிருந்து புறப்பட்ட பொதுமக்கள் நூற்றுக்கணக்கான இராணுவத்தினரால் ஆங்காங்கே அடையாள அட்டைப் பரிசோதனை செய்த பின்பே வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.



முன்னேற்றம் 08



‘அத்துப்படி’ 11

# வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து; தடுத்து நிறுத்த புதிய திட்டம்



## அமைச்சர் டிலான் தகவல்

(கொழும்பு)

இலங்கையர் எவரும் அநாவசியமாக வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பதை தடுத்து நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோர முடியாதவாறு புதிய சட்டம் ஒன்று விரைவில் நிறைவேற்றப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்கின்ற அநேகமானவர்கள் அந்த நாடுகளிலேயே அரசியல் தஞ்சத்தை கோருகின்றனர். இதற்காக அவர்கள் போலியான தகவல்களை வழங்குகின்றனர்.

எனினும் அவர்கள் போலியான தகவல்களை வழங்கியுள்ளமை உறுதியானதன் பின்னர், அந்த நாடுகள் அவர்களை நாடுகடத்துகின்றன.

இந்த நிலையில் அவ்வாறான நாடுகளின் கோரிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தற்போது இது தொடர்பான சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அது விரைவில் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கமலேந்திரனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவ்ரின் கொலைச் சந்தேக நபரான கமலுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கந்தசாமி

19 ஆம் பக்கம் பார்க்க

## தரம் உயர்த்தப்பட்டுள்ளது வவுனியா வைத்தியசாலை

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலை வட மாகாண வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்று வைத்தியசாலை அத்தியட்சகர் கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார். இந்த வைத்தியசாலை தரம்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் இன்று கறுப்புப்பட்டி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போய் எலும்புக்கூடாக மீட்கப்பட்ட கார்த்திகேசு நிருபனின் மரணம் குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இன்று கறுப்புப்பட்டி போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளதாக ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இன்று பி.ப. 2.00 மணியளவில் யாழ். பேருந்து நிலையத்திற்கருகில் இக்கறுப்புப்பட்டி போராட்டம் இடம்பெறவுள்ளதாகவும், இதில் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அண்மையில் மாங்குளம் பகுதியிலிருந்து எலும்புக்கூடு மீட்கப்பட்ட நிலையில் ஆசிரியர் நிருபனின் சடலம் இதுவென அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ,25)

## திருமலையில் நேற்று ஹர்த்தால்



(திருகோணமலை)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிராக திருகோணமலை நகரில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அநுராதபுரம் சந்தியிலிருந்து மணிக்கூட்டு கோபுரம் வரை கண்டனப் பேரணியொன்றும் நடைபெற்றது.

ஜெனிவாவில் மேற்கொள்ளப்படும் சதி நடவடிக்கைகளை முறியடிப்போம் என்ற தலைப்பில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றியம் என குறிப்பிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றின் மூலம் இதற்கான

19 ஆம் பக்கம் பார்க்க

# அமைதியை குலைக்க தீயசக்திகள் முயற்சி

## விழிப்புடன் இருக்க ஈ.பி.டி.பி. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்தத்துக்குப் பிந்திய அண்மைய வருடங்களில் நிலவி வரும் அமைதிச்சூழலை சீர்குலைக்க சில தீயசக்திகள் முயற்சிசெய்து வருவதாகவும், எனவே இன்றைய சூழ்நிலையில் பொது மக்கள் ஒவ்வொரு விடயத்தையும் விழிப்புணர்வோடும், எச்சரிக்கையோடும் அணுக வேண்டும் என்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கட்சி நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

கடந்த சில நாட்களாக வன்னிப்பகுதியில் பதற்றமான ஒரு சூழல் நிலவிக்கொண்டிருக்கிறது. இந்தப் புறச்சூழலை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன.

இது விரும்பத்தகாத ஒன்றாகும். நீண்ட போரினால் எமது மக்கள் அகரீதியாகவும் புறரீதியாகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலை மாறி, கடந்த நான்காண்டுகளாக ஒரு அமைதிச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த அமைதிச் சூழலை மேலும் வலுப்படுத்தி, அகரீதியாக உள்ள அரசியல் நெருக்கடிகளுக்கும் மிகக்குறைந்த அழுத்தத்துடன் உள்ள புறப்

19 ஆம் பக்கம் பார்க்க

## நவிப்பிள்ளையின் அதிகாரங்கள் என்ன? ஜெனிவாவில் கேள்வி எழுப்ப வேண்டும்

### அரசிடம் கோருகிறார் கோமின் தயாசிறி

(கொழும்பு)



நவிப்பிள்ளையின் அதிகாரங்கள் குறித்து ஜெனிவாவில் அரசு கேள்வி எழுப்ப வேண்டும் என்று சட்டத்தரணி கோமின் தயாசிறி அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு இருக்கும் அதிகாரங்கள் சம்பந்தமாக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் யோசனை ஒன்றை கொண்டு வர வேண்டும் எனவும் சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

தரம் 10 மாணவர்களுக்கான வரலாறு – பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் மற்றும் தரம் 7 – ஆங்கில வினாத்தாள்

உள்ளே

# இந்து மகளிர் கல்லூரியில் மாணவிகளின் சிறுவர் சந்தை

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் யாழ்ப்பாணம் செலான் வங்கியினால் 'ரிக்கிறி அங்காடி' என்னும் மாணவிகளின் சிறுவர் சந்தையொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான 'ரிக்கிறி அங்காடி' வியாபாரம் பிற்ப கல் 12.30 மணி வரை இடம்பெற்றது.

இக்கல்லூரியைச் சேர்ந்த தரம் 6 மற்றும் தரம் 7ஐச் சேர்ந்த சுமார் 400 மாணவிகள் இதில் பங்கேற்றனர். மரக்கறி வகைகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், சிற்றுண்டிகள், கை வேலைப் பொருட்கள் என பல்வகைப் பொருட்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் என அதிகளவானோர் இங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

ரிக்கிறி அங்காடியில் வைக்கப்பட்டிருந்த பொருட்களைக் கல்லூரி மாணவிகளே எடுத்து வந்திருந்தனர். இவற்றின் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை மாணவிகள் அங்குஅலுவலகம் அமைந்திருந்த செலான் வங்கி உத்தியோகத்தர்களிடம் கையளித்து தமது பெயரில் செலான் சேமிப்புக் கணக்கு ஒன்றை ஆரம்பித்துக் கொண்டனர்

செலான் வங்கியின் 'ரிக்கிறி அங்காடி' முதலில் தென்மராட்சி கல்வி வலயத்தில் டிறிபேர்க் கல்லூரி, இந்து ஆரம்பப் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் நடைபெற்றுள்ளது.

இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

படிப்படியாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளிலும் இச்சந்தை நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செலான் வங்கியின் முகாமையாளர் உட்பட பல உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (137)

# நூல்கள் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

செவ்வக்குமாரின் 'ஊசல்' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இவ் வெளியீட்டு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையினை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப்பதிவாளர் இ.சர்வேஸ்வராவும், ஆசியுரையினை மூத்த எழுத்தாளர் சிற்பி சரவணபவனும், வாழ்த்துரைகளை எழுத்தாளர் கோப்பாய் சிவம்,வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, அருள் ஆச்சிரம அதிபர் அருட்பணி ஏ.எம்.ஸ்ரீபன், சுன்னாகம் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் ஆகியோரும்,

வெளியீட்டுரையினை ஆய்வாளர் நிலாந்தன், ஆய்வுரைகளை ஐ.சாந்தன், சட்டத்தரணி ராஜகுலேந்திரன், சிறப்புரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் வழங்கவுள்ளார்கள். (63)

□ □ □ □ □

புலவர் மணி காப்பியக்கோ ஜின்னாஜ் ஷரிபுத்தீனின் 'எல்லாளக்காவியம்' நூல் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல.15, றக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக கலாமன்ற கலாமுற்றம் ஓவியக்கூடத்தில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வரவேற்புரையினை கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீபனும், ஆசியுரையினை திருமறைக்கலாமன்ற இயக்குநர் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரும், வெளியீட்டுரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், ஆய்வுரையினை கலாநிதி ந.அகளங்கனும், நயப்புரையினை கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு ஆகியோரும் வழங்கவுள்ளார்கள். நூலின் முதற்பிரதியை புரவலர் எஸ்.பி.சாமி பெற்றுக்கொள்ளவுள்ளார். (63)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2514 திகதி 19-03-2014

ஆங்கில எழுத்து: X

வெற்றி எண்கள் 04 06 07 09

போனஸ் இல: 05

ஜக்பொட் பரிசு ரூ.10,598,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 241783 | 20/- | 4,835,660/- |
| 2 இல | 17342 | 100/- | 1,734,200/- |
| 3 இல | 368 | 1,000/- | 368,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9345 | 40/- | 373,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 678 | 1,000/- | 678,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,598,900/- | - |
| 1 இல + போனஸ் இல | 11522 | 100/- | 1,152,200/- |
| 2 இல + போனஸ் இல | 533 | 500/- | 266,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 429 | 200/- | 85,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 282044 | | 11,195,660/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.03.22 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 11,257,900/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3335)


# சின்னஞ்சிறு செய்திகள்

## லயன்ஸ் கழக ஆளுநர் வருகை

(வடமராட்சி)

லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ இன்று வடமராட்சிக்கு வருகை தரவுள்ளார்.

வடமராட்சி தெற்கு-மேற்கு கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்துக்கு வருகை தரும் இவர் அன்றைய தினம் புதிய அங்கத்தவர்களின் சத்தியப் பிரமான நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் பல சமூக நல உதவித்திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (109)

## மென்பந்துச் சுற்றுப் போட்டி

(அச்சுவேலி)

கரணவாய் சோழங்கன் விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட ரீதியில் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் மென்பந்துச் சுற்றுப்போட்டியை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் கரணவாய் மகா வித்தியாலய மைதானத்தில் நடத்தவுள்ளது.

இதற்கான பதிவுகளை 0773485832 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

## டெங்கு ஒழிப்பு

(ஆனைக்கோட்டை)

ஆனைகோட்டை கிராம வாசிகள் தாமகவே முன்வந்து தமது காணிகளைத் துப்புரவு செய்து பற்றைகளுக்கு தீ மூட்டி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (114)

## நஞ்சருந்திய வயோதிபப் பெண் சிகிச்சை பயனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

நஞ்சருந்தி ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

நவக்கிரி புத்தூரைச் சேர்ந்த இராசரத்தினம் ரேவதி (வயது-65) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நஞ்சருந்தி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் இவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.


கணவனுடன் தனித்து வாழ்ந்து வந்த இந்த வயோதிபப் பெண் நோய் காரணமாகவே நஞ்சருந்தியதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை தீவுப் பகுதி முழுவதும், வலந்தலை, காரைநகர், சிவகாமி அம்மன், களபூமி, ஆலடி, வியாவில், Navy, துறைமுகம், நெல்லியடி, குஞ்சர்கடை, மந்திகை, அல்வாய், கரவெட்டி, திக்கம், எழுதுமட்டுவாழ், முகமாலை, உசன், மிருசுவில், தவசிக்குளம், முகாவில் ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதியின் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியின் - கன்னாதிட்டி சந்தி வரை, மின்சார நிலைய வீதியின் ஒரு பகுதி, காங்கேசன்துறை, பலாலி, மயிலிட்டி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, வட்டியில்லாத 2 இலட்சம் ரூபா கடன் இலங்கை வங்கி ஊடாக வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 17 ஆம் திகதி நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் தலைமையில், நாவலடி அரியாலை கிழக்கு சனசமூக நிலையத்தில், மாதர் சங்கத் தலைவி ச.சந்திராதேவி ஏற்பாட்டில் இடம்பெற்றபோது...

# அலரி விதை உட்கொண்ட இரு பிள்ளைகளின் தாய் மரணம்

இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் அலரி விதை உட்கொண்டு ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டபோது அங்கு மரணமடைந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த ரி.தமயந்தி (வயது-34) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடும்பத் தகராறு காரணமாகவே அவர் இவ்வாறு அலரி விதை உட்கொண்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண்ணின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (பா)

# வாழ்நாள் கலைஞர்கள் தமது கலையை மாணவர்களுக்கு வழங்க முன்வரவேண்டும்

## வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

இளம் பராயத்திலிருந்து கலையைப் பயின்று பின்பு அக்கலையை தமது பிரதேசங்களில் வளர்த்தெடுக்கும் கலைஞர்கள் அடுத்த தலைமுறைக்கும் கலையை வழங்குவதற்கு முன்வரவேண்டும். அந்தவகையில் பாடசாலை மட்டத்திலிருந்து கலைகளை நெறியாள்கை செய்வதற்கு கலைஞர்களின் பங்களிப்பு மிக அவசியமானதாகும். என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு கலாபூஷணம் விருது பெற்று பருத்தித்துறை பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கலாசாரப் பேரவைத் தலைவர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வாழ்நாள் கலைஞர்களின் பணிகள் மெருகூட்டப்படல் வேண்டும். அவர்களை கௌரவிக்க வேண்டும். இக்கலைஞர்கள் மூலமாகத்தான் எமது பாரம்பரிய கலைகள் குறிப்பாக வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்து போன்ற நாடகக் கலைகளை எதிர்கால சந்ததியினருக்கு வழங்க முடியும்.

அந்த வகையில் எமது பாரம்பரிய கலைகளை அழிய விடாது அவற்றுக்கு உயிர் கொடுக்க வாழ்நாள் கலைஞர்கள் முன்வரவேண்டும். இன்றைய எமது இளம் சந்ததியினருக்கு இக்கலைகளை கற்றுக்கொடுக்க வாழ்நாள் கலைஞர்கள் பாடசாலை மட்டத்தில் நெறியாள்கையை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் மத்தியில் இத்தகைய கலைகளை கொண்டு செல்கின்ற போது அவர்களுக்கு கலைகள் மீது ஆர்வம் ஏற்படும்.



அந்த வகையில் கிராம மட்டத்திலிருந்து பாடசாலைச் வரை இக்கலைகளை வளர்க்க வாழ்நாள் கலைஞர்கள் முன்வருவார்களானால் பாடசாலைச் சமூகம் முழு ஒத்துழைப்பை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (116)



கொக்குவில் புதுக்கோவில் என அழைக்கப்படும் கிருபாகர ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் வடக்கு வீதியில் கோவில் நிர்வாகத்தினால் இரும்பு மற்றும் தகரத்திலான வேலி ஒன்று அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (137)

# வானவியல், இயற்கை விஞ்ஞானம் விளக்க உரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

நாம் வாழும் பிரபஞ்சம் தொடர்பான விஞ்ஞான ரீதியிலான சமகால விடயங்களை எம் மக்களிடையே பிரபல்யமாக்கும் நோக்கில் இன்று பி.ப. 3.00 மணிக்கு யாழ் நூல்நிலைய கேட்போர் கூடத்தில் விபரண விளக்க உரையும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

வானவியல் மற்றும் இயற்கை விஞ்ஞானம் தொடர்பான சகல பரிமாணங்களிலுமான முன்னோடி விஞ்ஞான தகவல்களையும், வளங்களையும் அறியத்தருவதுடன் அத்துறையில் நாட்டம் கொள்வதற்கான உந்துதலையும் ஏற்படுத்துவதில் எமது கழகம் (Association for Popularizing Astronomy and Natural Science) ஈடுபட்டுள்ளது.

இம்முயற்சியின் ஓர் அங்கமாக 2013 ஆம் ஆண்டு யாழ். முகாமையாளர் சம்மேளனம் (Jaffna Manager's Forum), யாழ். பொது நூலக கேட்போர்கூடம் மற்றும் யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் எமது கழகம் விபரண விளக்க உரைகளையும் கலந்துரையாடல்களையும் நடாத்தியுள்ளது.

நாம் வடக்கிலுள்ள பாடசாலைகளிலும் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் வானவியல் மற்றும் இயற்கை விஞ்ஞான கழகங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். தெற்கிலுள்ள பல முன்னணி பாடசாலைகளில் இவ்வாறான கழகங்கள் உண்டு. றோயல், நாலந்தா, டீ.எஸ்.சேன நாயக்க, சிறிதர்மலோக பாடசாலைகள் இது தொடர்பில் குறிப்பிடத்தக்கவை.

இந்நோக்கத்தின் முன்னோடியாக யாழ். மாவட்டத்திலிருக்கும் பாடசாலைகளைச் சேர்ந்த விஞ்ஞான, புவியியல் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், இத்துறை சார்ந்த கல்விமான்கள் மற்றும் இத்துறையில் நாட்டம் கொண்டோர்களுக்கான விபரண விளக்க உரையும் கலந்துரையாடலும் இன்று பி.ப. 3.00 மணிக்கு யாழ்.நூல்நிலைய கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சமூகமளித்து பயன்பெறுமாறு அனைவரையும் ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.

## கொலம்பஸ்சின் வரைபடங்கள் அறிமுகமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)



யோ-கர்ணனின் கொலம்பஸ்சின் வரைபடங்கள் அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் கருணாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மதிப்பீட்டுரையை கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் சி.ஜெய்சங்கர், எழுத்தாளர் உமா வரதராஜன், கவிஞர் சோ.பத்மநாதன், கவிஞர் த.விஷ்ணு (வேலணையூர்தாஸ்) ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மகிந்தவைக் கவிழ்ப்பது யார்? - 06

# முடிவேயில்லாமல் கதையளந்து கொண்டே போகும் கூட்டமைப்பு!




'இந்தா பார், இருந்து பார். இந்தத் தடவையோடு மச்சானின் கதை முடியுது' என்றமாதிரி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கும் ஆயுளுக்கும் ஆருடம் சொல்லிக் கொண்டிருக்கிறது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்தக் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கும் கூட்டமோ வாயைப் பிளந்து கொண்டும் வானத்தைப் பார்த்துக்கொண்டும் ஏதாவது அதிசயங்கள், அற்புதங்கள் நிகழாதா என்று ஏங்கிக்கொண்டும் இருக்கின்றது.

ஆனால், எந்த வானத்திலிருந்தும் ஏதொரு அதிசயமும் நடக்கவில்லை. நடக்கும் என்ற அறிகுறியுமில்லை.

என்றாலும் கூட்டமைப்பினரின் புலுடாக் கதைகள் மட்டும் ஒயவில்லை. 'அது ஓயாத அலைகள் அண்ணை. இப்படித்தான் பம்மாத்துக் காட்டிக்கொண்டேயிருக்கும்' என்று சொல்கிறார் ஒரு முன்னாள் போராளி.

அவர் அனுபவசாலி. அனுபவத்தின் வழியாக உருவாகிய ஒரு அறிவாளி.

ஏனென்றால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த மாதிரி, சனங்களுக்கு 'வெள்ளிகாட்டிய கதைகள் ஏராளம் உண்டு என்று அவருக்கு விளங்கியிருக்கு.

மகிந்த ராஜபக்ஷவைக் கவிழ்க்கிறதுக்கு எண்டு, ரண்டு வருசத்துக்கு முதலே ஒரு பெரிய எடுப்பில் பென்னாம் பெரிய வியூகத்தை வகுத்தது கூட்டமைப்பு.

ரணில் விக்கிரமசிங்காவோடு சேர்ந்து இந்தியா, அமெரிக்கா எண்டு பல நாடுகளின் உதவி, ஒத்தாசைகளோடு இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு திட்டமிட்டது அது.

இதற்காகத்தான் இந்தக் கூட்டு அப்பொழுது சரத்பொன்சேகாவைக் காத்தவராயனாக்கிக் களத்திலிறக்கியது.

ஆனால், அந்தக் காத்தவராயன் தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாமல் கூட்டிலடைபட்டுக் கழுவேறி வந்தார்.

பதிலாக மகிந்தரே கதிரையைக் கைப்பற்றினார்.

என்றாலும் விக்கிரமாதித்தன் – வேதாளம் கதையைப்போல முடிவேயில்லாமல் 'மகிந்தவைக் கவிழ்க்கிறோம் பாருங்கள், ஆட்சியைக் கலைக்கிறோம் வாருங்கள்' என்று கதையளந்து கொண்டேயிருக்கிறது கூட்டமைப்பு.

இந்தப் பந்தயத்துக்காக அது வைக்கிற துருப்புச் சீட்டுகளாக அமெரிக்காவையும் ஐ.நா.வையும் வைத்திருக்கிறது. போதாக்குறைக்கு இந்தியா, பிரித்தானியா என்று துணைச் சரக்குகளையும்.

ஆனால், ஆனானப்பட்ட அமெரிக்காவே இலங்கை விவகாரத்தில் தன்னுடைய காய்களை நகர்த்த முடியாமல் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் போது, ஒளித்துப் பிடித்துக் கொண்டிருக்கும்போது கூட்டமைப்புக்காக அது குடை பிடிக்கப்போகிறதா?

என்றாலும் கூட்டமைப்பின் நப்பாசை போகவில்லை.

அதற்காக அது இடையில் ஜெனிவா என்றும் ஐ.நா. என்றும் நவநீதம்பிள்ளை என்றும் டேவிற் கமரூன் என்றும் கைளில் என்ன எல்லாம் கிடைக்குதோ அதையெல்லாம் வைத்துப் படங்காட்டிக் கொண்டிருக்கிறது.

வாக்களித்த மக்களுக்கு இடையிடையே இப்படி எதையாவது சொல்லிச் சமாளிக்கவும் தன்னுடைய தொண்டர்களுக்கு எதையாவது சொல்லி ஊக்கப்படுத்தவும் வேண்டுமல்லவா! அதற்காகத்தான் இந்த உல்டாக்கள் எல்லாம்.

தான் சொல்வதெல்லாம் நடக்குமா நடக்காதா? அப்படி நடக்காது விட்டால் அதற்கு யார் பொறுப்பு? நடக்காத அல்லது நடக்க முடியாத காரியங்களை எல்லாம் ஏன் சொன்னீர்கள் என்று கூட்டமைப்பினரைப் பார்த்து யாரும் கேள்விகள் கேட்கமாட்டார்கள் என்றும் அதற்குத் தெரியும்.

எனவே எதைவேண்டுமானாலும் எப்படியும் சொல்லலாம். இதை ஆமோதிப்பதற்கு ஆய்வாளர்களும் ஒத்து ஊதுவதற்குப் பத்திரிகைகளும் இருக்கின்றன.

சனங்களுக்கும் ஒரு போதை தேவை. அந்தப் போதைக்கு அவர்களும் பழகி விட்டார்கள்.

போதைச் சமூகத்தை எப்பவும் அந்தப் போதையிலேயே வைத்திருக்க வேண்டும் என்பதே அதனுடைய தலைமையின் சிந்தனையும்.

எனவேதான் இந்தமாதிரி, எப்பவும் எதிர்த்தரப்பை எதிர்ப்பதாகக் காட்டும் அரசியல் வித்தையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஈடுபடுகிறது.

காலம் முழுவதும் கொழும்பில் ஆட்சியிலிருக்கும் தலைவர்களை எல்லாம் கவிழ்ப்பதாகவே கதை விட்டுக்கொண்டிருக்கும் தமிழ்த்தரப்பின் வம்சம்தானே இந்தக் கூட்டமைப்பும்.

எனவே அந்தப் பரவணிக்குணம் மாறாமல் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்கு.

என்ன செய்வது? எல்லாம் இந்தச் சனங்களின் போதையால் வந்த வினைதான்.

போதையில் ஊறிய சமூகமும் போதைக்கு அடிமையாகிய மனிதர்களும் அதிலிருந்து மீளமாட்டார்கள். அந்தப் போதைக்கே அவர்கள் அடிமையாகி விடுவார்கள்.

இதுதான் கூட்டமைப்பின் பெரும் பலம். இறுதியில் வேதாளமும் முள்முருக்க மரமும்தான் தமிழர்களின் அரசியல் வரலாறாக எஞ்சியிருக்கப்போகின்றன.

மகிந்த ராஜபக்ஷவை மட்டுமல்ல இதற்குப் பிறகு வரப்போகின்ற எந்தப் பயலையும் கூட இவர்கள் ஒன்றும் செய்துவிடப் போவதில்லை.

உலகில் எப்படி வாழ்வது என்பதையாவது தெரிந்து கொள்ளும் அளவுக்கு உன்னை நீயே அறிந்து கொள் அதுவே வாழ்க்கையில் நீ அடையத்தக்க பெரும் பேறு. - ஜேம்ஸ் டக்ஸில்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கிரிமியா நமக்குச் சொல்வது...

சோவியத் யூனியன் உடைவுக்குப் பின்னர் அமெரிக்காவும் அதன் நேசநாடுகள் கூட்டணியும் உலக ஒழுங்கை பெருமளவுக்குத் தாங்களேதான் கையாள்வதாக நினைத்துச் செயற்பட்டு வந்தன.

பயங்கரவாதம் எது என்று தீர்மானிப்பதாகட்டும், மனித உரிமை மீறல்கள் எவை என்று தீர்மானிப்பதாகட்டும், எங்கே ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டும் அல்லது ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்று தீர்மானிப்பதாகட்டும், எந்தெந்த நாடுகளைப் பிரிப்பது எந்தெந்த நாடுகளை ஒன்றுசேர்ப்பது, அதற்காக எந்தெந்த நாட்டின் வீதிகளில் மக்களை இறக்கி ஆர்ப்பாட்டங்களை செய்ய வைப்பது என்பதெல்லாம் தங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்குரியவை என்றே அவை நடந்து வந்தன.

இந்தியாவும் கூட இந்த மேற்கு நாடுகளின் வல்லபங்களுடனேயே தன்னை இணைத்துக் காண்பித்துக் கொள்வதான போக்கும் சமீபகாலம்வரை இருந்தது.

இப்போது, தங்கள் பாணியிலேயே அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் உக்ரைனில் ஆட்சிமாற்றம் ஏற்படுத்தியதை அடுத்து, அதற்கு ரஷ்யா கொடுத்த பதிலடி, தற்போதைய உலக ஒழுங்கமைவில் சற்று அதிர்வை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்கக் கூட்டணியின் பூச்சாண்டிகளைப் பொருட்படுத்தாது, ரஷ்யா கிரிமியாவைத் தன்னுடன் இணைத்துக் கொண்டமையானது பல அதிர்வுகளை உலகப்பரப்பில் விட்டிருக்கிறது. முக்கியமாக, அமெரிக்கக் கூட்டின் ரஷ்யா மீதான அச்சுறுத்தல்கள் பொருளாதாரத் தடை அறிவிப்புகளுக்கெல்லாம் இந்தியாவும் சீனாவும் இணக்க மறுப்பை வெளிப்படையாகத் தெரிவித்திருப்பதானது புதிய உலகசமநிலையின் வெளிப்படுகை என்றே பார்க்க முடிகிறது.

16.03.2014 ஞாயிற்றுக்கிழமை கிரிமியாவில் நடைபெற்ற பொது வாக்கெடுப்பில், உக்ரைனில் இருந்து சுதந்திரம் பெறுவதாகவும், தங்கள் பகுதியை ரஷ்யாவுடன் இணைக்க விருப்பம் தெரிவித்தும் கிரிமியப் பிரஜைகளில் 97 சதவீதம் பேர் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டுவர அமெரிக்கா முயற்சித்தது. தனது "வீட்டோ" அதிகாரத்தின் மூலம் ரஷ்யா அதை முறியடித்துவிட்டது. ஆக, உலக மேலாண்மைப் போட்டியில் அமெரிக்காவுக்கு நேர்ந்திருக்கும் சறுக்கல் இது.

தங்கள் சுரண்டலுக்கு ஒத்துவராத நாடுகளில், மக்கள் போராட்டங்களைத் தூண்டிவிட்டு, தங்களது நலன்களுக்குச் சார்பான ஆட்சிகளை அங்கு அமர்த்துவதே அமெரிக்கக் கூட்டின் நோக்கம். புவி அரசியற் பலன்களைத் தவிர அவர்களுக்கு வேறெந்த மனித, இன உரிமை அக்கறைகளும் கிடையாது.

யுகோஸ்லாவியாவிலிருந்து கொசோவாவைப் பிரிப்பதில் முன்நின்ற அதே அமெரிக்காதான் இப்போது உக்ரைனிலிருந்து க்ரீமியா பிரியக்கூடாது என்கிறது. உக்ரைனின் இறைமை பற்றிப் பேசுகிறது. வேடிக்கைதான்!

கிரிமிய விவகாரம் நமக்கு இன்னொன்றையும் புலப்படுத்துகிறது. சிறிய நாடுகளின் கதி எல்லாம் அதன் பக்கத்திலுள்ள "பெரியண்ணன்" நாட்டினது கையிலேயே தங்கியிருக்கிறது.

புலம்பெயர் சகோதரர்களும் அவர்களிடமிருந்து கிடைக்கும் நிதிகளை எதிர்பார்த்துச் செயற்படும் இங்குள்ள தலைவர்களும் நமது மக்களுக்குக் காட்ட முற்படுவது ஏமாற்று நம்பிக்கை. மேற்கு நாடுகளால் நமக்கு எந்தத் தீர்வையும் கொண்டுவர முடியாது.

இலங்கையிலும் இப்படி ஒரு தனிநாட்டுப் பிரிவினைக்கான வாக்கெடுப்பைக் கொண்டுவரலாம் என்ற கனவை விதைப்பவர்கள் தமிழ்மக்களை தொடர்ந்து ஏமாற்றுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அப்படியொரு வாக்கெடுப்புத் தீர்மானத்தை இந்தியாவின் சம்மதமின்றி அமெரிக்கா கொண்டு வர இயலாது. டெல்லியில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தாலும் சரி, பா.ஜ.க ஆட்சி ஆனாலும் சரி இந்தியா அப்படியான வாக்கெடுப்புக்குச் சம்மதிக்காது. - ஆசிரியர்

# ஈராக் - இலங்கை இடையே

# நேரடி விமான சேவைக்குத் திட்டம்

(கொழும்பு)

ஈராக்கிற்கும், இலங்கைக்குமிடையில் நேரடியான விமான சேவையை தொடங்குவது தொடர்பாக இருநாட்டு பிரதிநிதிகளுக்குமிடையே நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஈராக்கின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நசார் அல்கீர் அல்லா ஈராக்கிற்கான இலங்கைத்தூதுவர் சுமித் நகன்டலாவை தலைநகர் பாக்தாத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பாக ஈராக்கிய அரசாங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈராக்கிற்கும், இலங்கைக்குமிடையேயான இருதரப்பு உறவை வலுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது நிரந்தரமான வகையில் நேரடிவிமான சேவையை நடாத்துவது தொடர்பாகவும் பேசப்பட்டது.

அத்துடன் இருதரப்பு வர்த்தக நல பரிமாற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான 13 பேரடங்கிய குழுவினர் கடந்த மாதம் ஈராக்கிற்கு விஜயம் செய்து இருதரப்பு பொருளாதார உறவுகள் குறித்து பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் பிரதிபலனாக இலங்கையின் வாசனைத் திரவியங்கள் மீதான தடையை ஈராக் நீக்கியதுடன், இலங்கை தேயிலை உட்பட 13 பொருட்களின் இறக்குமதிக்கும் ஈராக் அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாய் வைத்தியசாலைக்கு தொலைக்காட்சிப் பெட்டி அன்பளிப்பு

(ஆனைக்கோட்டை)

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தினர் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு புதிய தொலைக்காட்சிப் பெட்டியொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இடம்பெற்ற தொலைக் காட்சி கையளிக்கும் நிகழ்வில் சனசமூக நிலைய அங்கத்தவர்கள் சார்பில் தொலைக்காட்சிப் பெட்டியினை நிலையத் தலைவர் நிலாமனோகரன் வைத்தியசாலை பொறுப்பதிகாரி ஆ.சாந்தநேசனிடம் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் முன்னாள் பொறுப்பதிகாரி க.நடராசா, வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (104)

## யாழ்.ஓட்டுமடத்தில் மூவர் கஞ்சாவுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஓட்டுமடம் பகுதியில் கேரள கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் மூவரை நேற்றுமுன்தினம் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து 5 கிலோ கேரள கஞ்சாவை கைப்பற்றியதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸின் தலைமையிலான புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்தே குறித்த சந்தேக நபர்களைக் கைது செய்ததாகவும் பொலிஸார் கூறினர். (25)

## மதிலில் காயவிட்ட புகையிலைகள் சாதுரியமான முறையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் மத்திய கல்லூரியின் வெளிமதிலில் உலரவைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலைகள் சாதுரியமான முறையில் நேற்றுமுன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். புகையிலை செய்கையாளர் ஒருவர் தாம் அறுவடை செய்த புகையிலைகளினை உலர்த்துவதற்காக மேற்படி பாடசாலை மதில்களில் அவற்றைப் போட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு திருடர்கள் சிலர் எவ்வித பதட்டமுமின்றி உலரவைக்கப்பட்டிருந்த அனைத்து புகையிலைகளினையும் வாகனமொன்றில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

எனினும் புகையிலைகளினைக் காயப்போட்ட உரிமையாளர் புகையிலைகளினைக் காணாது அருகில் விசாரித்த போதே வாகனத்தில் வந்த சிலர் இவ்வாறு புகையிலையினை வாகனத்தில் திருடிச் சென்ற விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

இது தொடர்பாக உரிமையாளரினால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது புகையிலை அறுவடைக் காலமாகையினால் புகையிலைச் செய்கையாளர்கள் அறுவடை செய்த புகையிலைகளினை மதில்களில் போட்டு உலர்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

(மானிப்பாய்)

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் பழையமாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது. இப்பொதுக்கூட்டமானது இன்று பி.ப 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து பழையமாணவர்களையும் தவறாது சமூகம் தருமாறு பாடசாலை அதிபர் திருமதி சிவகுமாரன் கேட்டுள்ளார். (48)

♦♦ ♦♦ ♦♦

(கரணவாய்)

நெல்லியடி வாணிபர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழக உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கழக செயலாளர் அறிவித்துள்ளார். (18)

## குடும்பங்களிடையே சண்டை; 11 பேர் எச்சரிக்கையின் பின் விடுதலை

(கரணவாய்)

கரவெட்டி இராஜகிராமத்தில் இரு குடும்பங்களிடையே இடம்பெற்ற சண்டையில் இரு குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் சண்டையில் ஈடுபட்ட இரு குடும்பங்களையும் சேர்ந்த 11 பேர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணை செய்த நீதிபதி குறித்த நபர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தீர்ப்பளித்ததுடன் இவர்களிடையே சுமூகமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆலோசனை வழங்குமாறு இணைக்க சபையைப் பணித்துள்ளார். (18)

## நிர்வாக சபைக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)


ஊர்காவற்றுறை பிரதேசசபை ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் மாசி மாதத்துக்கான நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00மணிக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நலன்புரிச்சங்கத் தலைவர் ப.குகனேசன் தலைமையில் இடம்பெறும்.

# சர்வதேச விசாரணைக்கு அரசு மற்றும் புலிகளையும் உட்படுத்த வேண்டும் என்று கோரும் ரீ.என்.ஏ யின் கள்ளம்

டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து

**இந்த முன்னணி நீதியாளர் மறந்து விட்ட ஒரு உண்மை என்னவென்றால் அவர் நீதிமன்றத்தில் அமர்ந்து, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் மீதான வழக்குகளை விசாரித்தபோது அந்தப் பயங்கரவாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கியதை.**





**யுத்தத்துக்கு பிந்தைய சூழலில் தமிழ் சமூகம் எதிர்நோக்கும் கடினமான இக்கட்டான சூழ்நிலையில் தற்போது கிடைத்துள்ள இந்த வாய்ப்பை பயன்படுத்தி அரசுடன் ஒரு பங்காளியாக சேர்ந்து புனர்வாழ்வு, அபிவிருத்தி, மற்றும் உயர்ந்த இலக்குகளை நோக்கி ஊக்கமளிக்கும் வகையில் தங்கள் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதே ஒரு பொறுப்பான அரசியல் கட்சியின் கடமை என யாரும் எதிர்பார்ப்பார்கள். அதற்குப் பதிலாக ரீ.என்.ஏ தனது கூட்டான அறிவை அல்லது மடமையை எல்.ரீ.ரீ.ஈ மற்றும் எல்.ரீ.ரீ.ஈ சார்பான புலம் பெயர்ந்தவர்களின் இலக்கான சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கும் இச்சையை பூர்த்தி செய்ய பயன்படுத்துகிறது.**

ரி.என்.ஏயின் இந்த எல்லைமீறிய செய்கையினால் இறுதியாகத் தோல்வியடையப்போவது மீண்டும் நீண்ட காலமாக துன்பப்படும் இலங்கைத் தமிழ் மக்களே. போர் நிறைவடைந்த பின்னர் உடனடியாக ரி.என்.ஏ ஒரு புலிகள் - அல்லாத அல்லது ஒரு புலி - எதிர்ப்பு முகத்தை பெருமளவில் உலகத்துக்கு காட்டி ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது, மற்றும் இப்பொழுது மறுபடியும் ஒரு புதிய புலிகள் சார்பு நிலையை அது எடுத்து வருகிறது.

2010 பாராளுமன்றத் தேர்தலின் போது மூழ்கும் கப்பலை காப்பாற்றுவதற்காக அதன் சரக்குகளை தூக்கி கடலில் வீசுவதைப் போல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரை அவர்களது எல்.ரீ.ரீ.ஈ சார்பான நிலைப்பாட்டை காரணமாக்கி கட்சியை விட்டு தூக்கி எறிந்திருந்தது.

இப்போது அந்த நடைமுறையை தலைகீழாக்கி சிவாஜிலிங்கத்தை மீண்டும் உள்வாங்கியுள்ளது, அவர் இப்போது ஒரு மாகாணசபை உறுப்பினர். மற்றவர்களும் ரி.என்.ஏயின் போர்வைக்குள் திரும்ப விரும்பினால் அவர்களையும் கூட அது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

பின்னர் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி. அரியனேந்திரன் போன்றவர்கள் உள்ளனர், இவர்கள் எல்.ரீ.ரீ.ஈ உடன் தொடர்புகளைக் கொண்டிருந்ததுடன் தற்போதுகூட புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருகிறார்கள். மாகாணசபை தேர்தல்களின்போது ரி.என்.ஏ அப்பட்டமாக எல்.ரீ.ரீ.ஈக்கு சார்பான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது, முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் பிரபாகரனை மாவீரன் எனப் பாராட்டியதுடன் புலிகளை விடுதலைப் போராளிகள் எனவும் புகழ்ந்திருந்தார்.

இந்த முன்னணி நீதியாளர் மறந்து விட்ட ஒரு உண்மை என்னவென்றால் அவர் நீதிமன்றத்தில் அமர்ந்து, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் மீதான வழக்குகளை விசாரித்தபோது அந்தப் பயங்கரவாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கியதை.

கிளிநொச்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினரான பசுபதிப்பிள்ளை போன்றவர்கள் எல்.ரீ.ரீ.ஈயின் மக்கள் படை அமைப்பான எல்லைப் படையில் ஒரு அதிகாரியாக இருந்தவர், தேர்தல் மேடைகளில் அவர் வழங்கிய வாக்குறுதி, உயிர்நீத்த எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் நினைவிடங்களை மீள் கட்டமைப்பு செய்யப்படும் என்பதாகும். சில ரி.என்.ஏ யின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி அமைப்புகளும் அதற்கு ஆதரவாக தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தது.

வட மாகாணசபை அமைச்சர் பி.ஐங்கரநேசன், பொது நிகழ்ச்சிகளில் தேசியக் கொடியை ஏற்ற மறுப்பது போன்ற அரசியல் சாகசங்களில் ஈடுபட்டிருந்தார். சமீபத்தில் நடிகர் விஜய்க்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடாத்திய சில இளைஞர்களுடன் ஒரு சினிமா திரையரங்கு முன்பாக ஆட்சேபணையில் ஈடுபட்டார். அந்த இளைஞர்களிடம் “உங்களுக்கும் எங்கள் போராட்டத்தை காட்டிக்கொடுத்தவர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம் உள்ளது” என ஐங்கரநேசன் கேட்டு அவர்களைக் கடிந்து கொண்டாராம்.

இவை அனைத்துக்கும் மேலாக எழிலன் என்கிற சின்னத்துரை சசிதரன் என்கிற மூத்த எல்.ரீ.ரீ.ஈ தலைவரின் மனைவியான அனந்தி சசிதரன் என்பவர் தேர்தல் பிரசாரத்தின்போது எழிலனின் மனைவி அனந்தி என முன்னிறுத்தப்பட்டாராம்.

இத்தகைய புலிமயமாக்க ஊடுருவலுக்கு உள்ளாகியுள்ள ரி.என்.ஏ சூழலில்தான், இறுதிக்கட்ட போரில் நடந்தவைகள் பற்றிய சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அக்கட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரத்தை அவதானிக்க வேண்டியுள்ளது.

ரி.என்.ஏயின் பிரகடனங்கள் குறிப்பாக சர்வதேச விசாரணை தொடர்பான மூவரணியான சட்டக் கழுகுகள் சம்பந்தன், விக்னேஸ்வரன் மற்றும் சுமந்திரன் ஆகியோரது கருத்துக்கள் கோட்பாடு ரீதியாக ஒரு அணுகுமுறையை பின்பற்றுவதாக உள்ளன. அவர்கள் வலியுறுத்துவது முழு உண்மையும் வெளிப்படுத்தப்படுவதுடன் நீதியான தீர்ப்பு மற்றும் நீடித்த நல்லிணக்கம் என்பனவற்றை பொறுப்புக் கூறல் மூலம் முன்னேற்ற வேண்டும் என்று.

அதேவேளை உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பதில் குறிப்பாக ரி.என்.ஏ க்கும் மற்றும் பொதுவாக தமிழ் புலம் பெயர்ந்தவர்களிடையேயும் உள்ள இந்த அபரிமிதமான ஆர்வம் முக்கியமாக குறிப்பிடத்தக்க ஒன்றாகும், இதில் உள்ள முகமதிப்பு நிச்சயமாக வரவேற்கத்தக்கது ஆனால் அது விடுதலைப் புலிகளின் நடத்தை என்று வரும்போது அதை முற்றாக நம்பி விட முடியாது.

போர் உச்ச நிலையில் இருந்த போதுகூட எல்.ரீ.ரீ.ஈயின் பிடிக்குள் அகப்பட்டிருந்த தமிழ் பொது மக்களை விடுவிக்கும்படி ரி.என்.ஏ ஒருபோதும் விண்ணப்பம் செய்யவில்லை என்கிற உண்மையை கருதும்போது, எல்.ரீ.ரீ.ஈ உள்ளடங்கலாக இரு தரப்பினரதும் அத்துமீறல்களை விசாரிக்க அது ஒரு சர்வதேச விசாரணையை கோருகிறது என்பதை நம்புவது கடினமாக உள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ சிறுவர்களை படையில் இணைத்தது பற்றி ரி.என்.ஏ இன்னமும் கண்டனம் தெரிவிக்கவில்லை, அல்லது எல்.ரீ.ரீ.ஈயினால் கோரமாக படுகொலை செய்யப்பட்ட அரசியல் சகாக்களின் நினைவுகளை அது கொண்டாடவும் இல்லை என்கிறபோது, எல்.ரீ.ரீ.ஈ உள்ளடங்கலாக இரு தரப்பினரதும் அத்துமீறல்களை விசாரிக்க ரி.என்.ஏ ஒரு சர்வதேச விசாரணையை கோருகிறது என்பதை நம்புவது கடினமாக உள்ளது.

**போர் உச்ச நிலையில் இருந்த போதுகூட எல்.ரீ.ரீ.ஈயின் பிடிக்குள் அகப்பட்டிருந்த தமிழ் பொது மக்களை விடுவிக்கும்படி ரி.என்.ஏ ஒருபோதும் விண்ணப்பம் செய்யவில்லை என்கிற உண்மையை கருதும்போது, எல்.ரீ.ரீ.ஈ உள்ளடங்கலாக இரு தரப்பினரதும் அத்துமீறல்களை விசாரிக்க அது ஒரு சர்வதேச விசாரணையை கோருகிறது என்பதை நம்புவது கடினமாக உள்ளது. எல்.ரீ.ரீ.ஈ சிறுவர்களை படையில் இணைத்தது பற்றி ரி.என்.ஏ இன்னமும் கண்டனம் தெரிவிக்கவில்லை, அல்லது எல்.ரீ.ரீ.ஈயினால் கோரமாக படுகொலை செய்யப்பட்ட அரசியல் சகாக்களின் நினைவுகளை அது கொண்டாடவும் இல்லை என்கிறபோது, எல்.ரீ.ரீ.ஈ உள்ளடங்கலாக இரு தரப்பினரதும் அத்துமீறல்களை விசாரிக்க ரி.என்.ஏ ஒரு சர்வதேச விசாரணையை கோருகிறது என்பதை நம்புவது கடினமாக உள்ளது.**

“ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட மிகவும் தீமையான நிபுணர் குழாம் கூட தனது அறிக்கையில் எல்.ரீ.ரீ.ஈ புரிந்த மோசமான மீறல்களைச் சுட்டிக்காட்டியுள்ளது”. மேலும் புலிகளுக்கு ஆதரவாக ஆரவாரம் செய்யும் சக்திகள், ரி.என்.ஏ எல்.ரீ.ரீ.ஈயின் நடத்தைகளைக் குறித்து ஒரு சர்வதேச விசாரணையை கோருகிறதைப் பற்றி ஆத்திரப்படவோ அல்லது குற்றம் சாட்டவோ முயற்சிக்காதது நம்ப முடியாத ஒன்றாகவே உள்ளது, இல்லையெனில் ரி.என்.ஏயின் நிலைப்பாட்டை அவர்கள் தீவிரமாகக் கருதவில்லை என்றே தெரிகிறது.

அமெரிக்க தீர்மானம் போதுமான வலுவுடையதாக இல்லை எனக்கூறி இந்தியாவில் கென்டக்கி பொரித்த கோழிக்கறி கடைகளுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடாத்திய பைத்தியங்கள் நிச்சயமாக ரி.என்.ஏ தலைவர்களுடைய கொடும்பாவிகளை எரித்திருக்கும், ஆனால் ரி.என்.ஏயின் மோசடியான ஏமாற்று தோரணையால், அவர்களால் உண்மையை அறிந்து கொள்ள முடியவில்லை. ஜெனிவாவில் புலிக்கொடிகளை கர்வத்துடன் அசைத்துக்காட்டிய முட்டாள்கள் ஆயுதப் படையினர் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ ஆகிய இருதரப்பினரைப் பற்றியும் ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படுவதை ஆதரிக்கிறார்கள் என்பதை நம்ப முடியுமா?

தர்க்க ரீதியாக அது நம்பக்கூடியதாக இல்லை. இருந்தும் புலம் பெயர்ந்தவர்களிடையே உள்ள புலிகள் மற்றும் புலிகள் சார்பு சக்திகள் அதே போல இலங்கையிலுள்ள அவர்களது சக பயணிகள் தங்களது முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார்கள்.

ரி.என்.ஏ இந்தக் கோரிக்கையை இரு தரப்பினரதும் எனக் குறிப்பிட்டு தணிந்த குரலில் முழங்கி வருகிறது. எனவே ரி.என்.ஏ இரு தரப்பினரையும் பற்றி விசாரிக்க வேண்டும் என அழைப்பு விடுப்பது, காலத்திற்கு ஏற்றபடி நடவடிக்கை மேற்கொள்ளும் அதன் அரசியல் மோசடி மற்றும் சூழ்ச்சித் தன்மை என்னும் ஊகத்திற்கு வருவதற்கு சாத்தியம் உள்ளது, ஏனெனில் இப்போது தீவில் எல்.ரீ.ரீ.ஈ இல்லாதபடியால் இந்த நடவடிக்கை சாத்தியமற்றது என அது எண்ணுகிறது. ஒரு விசாரணை நடைபெறும் போது எல்லாம் உடையலாம்.

# நவநீதம்பிள்ளையிடம் அறிக்கை

# மன்னிப்பு கோரவேண்டும் ஹக்கீம்

## கோரிக்கை விடுக்கும் பொதுபலசேனா

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம், இலங்கை நிலைமைகள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்காக ஹக்கீம் மன னிப்புக் கோர வேண்டுமென பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

மன்னிப்புக் கோராவிட்டால் ஹக்கீமை தோலுரிக்கப போவதாகவும் பொதுபல சேனா அமைப்பு எச்சரிக்கை விடுத் துள்ளது.

சிங்கள சமூகத்திடம் ஹக்கீம் மன்னிப்புக் கோர வேண்டுமென பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.ஹக்கீமிற்கு நாட்டின் நீதி அமைச்சுப் பத வியை ஏன் ஜனாதிபதி வழங்கினார் என்பது புரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கைச் சிறுபான்மை மதங்கள் மீது சிங்கள கடும்போக்கு அமைப்புக்கள் அடக்கு முறைகளை பிரயோகித்து வருவதாக குற்றம் சுமத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜே.வி.பி.யின் தலைவர் பதவியிலிருந்து சோமவன்ச விலகக் காரணம் என்ன?

## குட்டை வெளிப்படுத்தும் பிரதி சபாநாயகர்

(கொழும்பு)

அதிகமான தேர்தலில் தோல்வி கண்டவர் என வரலாற்றில் இடம் பெற்று விடுவோம் என்ற அச்சத்திலேயே ஜே.வி.பி.யின் தலைவர் பதவியில் இருந்து சோமவன்ச அமரசிங்க விலகியதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சோமவன்ச அமரசிங்க அந்த அச்சத்தில் பதவியில் இருந்து விலகினாலும் அந்த மாபெரும் சாதனையை எமது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

ஆனால் இம்முறை தோல்வி அவர் மேல் சுமத்தப்படமாட்டாது. அந்தத் தோல்வி தலைமைத்துவச் சபை மேல் சுமத்தப்படும்.

ரணிலுக்கு அடுத்ததாக சோம வன்ச அமரசிங்க இருந்தார். தோல்வி என்ற ஏவுகணை தன் மீது பாய்ந் தால், ஐக்கிய தேசியக் கட்சி யினரும் சுதந்திரக் கட்சியினரும் சுற்றி வளைத்து விமர்சிப்பார்கள் என்பதை அறிந்து கொண்ட அவர், மெதுவாக தலைவர் பதவியில இருந்து நழுவிக் கொண்டார்.

தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொள்ள இதுவே கார்ரணம். ஆனால் இளைய தலைமுறைக்கு வழி விட்டு விலகிக் கொண்டதாக இப்போது கூறுகிறார். முடிந்தால் ஏனைய கட்சிகளும் இதனை பின்பற்றுமாறு சோம வன்ச கூறுகிறார்.

அவர் ஓய்வுபெற்ற பின்னர் கோமாளிக் கதைகளை கூறி சிரிப்பூட்டி வருகிறார் என பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக் கொடி குறிப்பிட்டுள்ளார்.

# அரச சேவையில் அதிகரித்த பெண்கள்

# நிர்வாகத்தை முன்னெடுப்பதில் சிக்கல்

## என்கிறார் அமைச்சர் செனவிரட்ன



அரச சேவையில் 75 வீதமானவர்கள் பெண்களாக உள்ளனர். இவ்வாறு பெண்கள் கூடுதலாகக் காணப்படுவதானது நிர்வாக சேவையை முன்னெடுத் துச் செல்வதில் நடைமுறைச் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதாக அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்,

அரச சேவைகள் மற்றும் அரச சேவையின் இணைந்த சேவைகளில் 54,000 பெண்கள் பணியாற்றுவதாகவும். இது 53.58 வீதமாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

அரச சேவையில் 44.96 வீதம் பெண்கள் பணியாற்றுகின்றனர்.

அதேபோல். அரச சேவையின் இணைந்த சேவையில் 52,684 பெண்களும் பணியாற்றுகின் றனர். பொதுவாகப் பார்த்தால் அரச சேவையில் 75 வீதமானவர்கள் பெண்களாக உள்ளனர். அண்மையில் வழங்கிய நியமனங்களில் கூடுதலானவர்கள் பெண்கள் கூடுதலாக பெண்ணைக் கொண்டு நிர்வாக சேவையை முன்னெடுப்பது நடைமுறைச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சைகள் நடாத்தி உரியவரகளைத் தேர்வு செய்யும் போது கூடுதலான பெண்களே பரீட்சைகளில் தோற்றி கூடுதலான புள்ளிகளுடன் தேர்வாகின்றன. இருந்தும் நாம் அவர்களைத் தடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# தமக்கு எதிரான கண்காணிப்பை நிறுத்தக் கோருகிறார் சந்திரிக்கா

(கொழும்பு)

தமக்கு எதிரான அனைத்து கண்காணிப்புகளையும் நிறுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச 2005 ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக சந்திரிக்கா குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதியன்று மகிந்த ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தமது நடவடிக்கைகள், நடமாட்டங்கள், என்பன கண்காணிக்கப்படுவது தமது அடிப்படை உரிமைகளை மீறும் செயல்லென சந்திரிக்கா சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தனி மனித சுதந்திரத்தை பாதிக்கும் செயல் அத்துடன் தமது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக சந்திரிக்கா கூறியுள்ளார்.

நீங்களும் உங்களது அரசாங்கமும எனது நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொண்டு வரும் கண்காணிப்புக்கள் சட்டவிரோதமானவை. அவை எனது அடிப்படை உரிமைகளை மீறும் செயல்கள் என்று சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று அவர் தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

தமக்கு எதிரான இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் யாவும் உங்களதும் உங்கள் சகோதரர் கோத்தாபய ராஜபக்சவினதும் கீழ் இயங்கும் பிரிவினராலேயே மேற்கொள்ளப்படுவதாக சந்திரிக்கா சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது தொலைபேசி, மின்னஞ்சல உட்பட்ட அனைத்து விடயங்களும் கண்காணிக்கப்படுகின்றன. தமது கொழும்பு மற்றும் ஹொரகொல்ல வீடு என்பனவும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

தமது வீட்டுக்கு வரும் விருந்தாளிகள் மற்றும் ஏனையோர் அரச புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர்.



அண்மையில் வெளிநாட்டு விருந்தாளிகளுடன் தாம் அனுராதபுரத்துக்கு சென்றிருந்த போது தாம் தங்கியிருந்த ஹோட்டல் 24 மணித்தியாலமும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும் சந்திரிக்கா குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளைமுன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்திக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இணக்கம் வெளியிட்டுள்ளார்.நாட்டின் மத ஒற்றுமை தொடர்பில் பேச்சு நடத்த சந்தர்ப்பம் தருமாறு சந்திரிக்கா விடுத்த வேண்டுகோளுக்கே ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளார்.

முதல் வேண்டுகோளுக்கு ஜனாதிபதி இணங்காத போதும இரண்டாம் முறை விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கே மகிந்த இணக்கம் வெளியிட்டுள்ளார்.

# திருத்தப்பட்ட தீர்மான வரைபு நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீர்மானத்தில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட திருத்திய தீர்மான வரைபையும் அரசாங்கம் நிராகரித்துள்ளது.

நேற்று முன்தினம் ஜெனிவாவில், ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் மற்றும் பார்வையாளர் நிலையில் உள்ள ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் ஒன்றை அரசாங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

இந்தக் கூட்டத்தில், இலங்கை அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி சில்வா, மற்றும் ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஆகியோர் இலங்கை குறித்த நியாயங்களை எடுத்து விளக்கியிருந்தனர்.

இதன்போதே, திருத்தப்பட்ட தீர்மான வரைவையும் சிறிலங்கா நிராகரிப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐநா மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணை என்ற போர்வையில், அனைத்துலக சமூகத்தின் ஒரு பகுதி, இலங்கைக்கு எதிராக அனைத்துலக விசாரணை பொறி முறையை உருவாக்க முனைகிறது.



அமெரிக்க தீர்மான வரைபின் திருத்தப்பட்ட வடிவமும் கூட ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்த நகர்வு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிறுவக கோட்பாட்டை மீறுகிறது.

தீர்மானத்தை எதிர்த்த போதிலும், மோதல்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு உள்நாட்டு செயல்முறைகளின் மூலம், தீர்வு காண இலங்கை உத்தரவாதம அளித்திருந்தது.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் அமர்வின் போதும், அதற்குப் பின்னரும், ஆபிரிக்க வலய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக நிற்க வேண்டும்.

இன்று இலங்கைக்கு ஏற்பட்ட கதி, நாளை இன்னொரு நாட்டுக்கு ஏற்படும் என்பதை மறந்து விடக் கூடாது என்றும் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்..

# இனந்தெரியாத நோய் கொழும்பில் மாநாடு

(கொழும்பு)

ஆசிய பசுபிக். பிராந்திய நாடுகளின் இனந்தெரியாத. நோய தொடர்பாக இலங்கையின் பிரவேசம என்ற மாநாடு நேற்று முன் தினம் கொழும்பில் ஆரம்பமானது.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் நடாத்தப்பட்ட இந்த மாநாடு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்றது.

இந்த மாநாட்டில், இந்தியா, கொரியா, பங்களாதேஷ் தாய்லாந்து, பூட்டான், இந்தோனேஷியா, மாலைதீவு, மியன்மார், நேபாளம் மற்றும் டிமோரி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, உழைக்கும் மக்களில் 21 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வருடம் ஒன்றிற்கு புகைப் பொருள் பாவனை காரணமாக மரணமாவதாக தெரிவித்தார்

# மேல்மாகாண முதல்வர் பதவி தவறிழைத்த அமைச்சர் பசில்



தாம் தவறிழைத்துவிட்டதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணசபையின் முதலமைச்சர் பதவி குறித்து எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிட்டிருக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். மேல் மாகாண முதலமைச்சராக பிரசன்ன ரணதுங்கவே மீண்டும் தெரிவு செய்யப்படுவார் என அண்மையில் பிரசார கூட்டமொன்றில், அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து கட்சி வட்டாரத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களிலும் இவ்வாறு முதலமைச்சர் பற்றிய தகவல்களை வெளியிட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார். எனினும், கொழும்பு வாழ் மக்கள் தமது ஊகத்தை சரியானது என நிரூபிப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் கொழும்பு மாவட்ட கூட்டணியின தலைமை வேட்பாளராக உதய கம்மன்பிலவை நியமிக்க தாம் எடுத்த தீர்மானத்திற்கு அனைவரும் ஆதரவளித்தார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், சில தீய சக்திகள் இதனை பிழையாகப் பிரசாரம் செய்ய முயற்சித்ததாகத் தெரிவித்துள்ளார். பிரபாகரன் ஆயுதங்களின் மூலம் செய்ய முயற்சித்தவற்றை சிலர் வேறும் வழிகளில் முயற்சித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்

# மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள்

# கிளிநொச்சியில் பல்வேறு செயற்றிட்டங்கள்

## அரச அதிபர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ் நிலையை உயர்த்துவதில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அந்த வகையில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமைய எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன் பதாக அனைத்து பொதுக் கட்டடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் உட்பிரவேசிக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அதற்கமைய அரசாங்க அதிபர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட தபாலகங்களிலும், புகையிரத நிலையங்களிலும் மாற்றுத் திறனாளிகள் உட்பிரவேசிக்கும் வகையிலான கட்டட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள அரச, அரச சார்பற்ற, தனியார் பொதுக் கட்டடங்கள் அனைத்திலும் மாற்றுத் திறனாளிகள் உட்பிரவேசிக்கும் வசதிகளைச் செய்து கொள்வது தொடர்பான அறிவு றுத்தல்களை உரிய திணைக்கள தலைவர்களுக்கும், முகாமை யாளர்களுக்கும் அரசாங்க அதிபர் கடிதம் மூலமாக அறிவித்துள்ளார்.

மிக அண்மையில் செலான் வங்கியிலும் இத்தகைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அது போல ஏனைய அரச, தனியார் நிறுவனங்களும் இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் திருநாவுக்கரசு சிவமாறனும் இது தொடர்பான விழிப்புணர்வை மாவட்ட மட்டத்தில் அரச அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றார். விழிப்புலனற்றோர் உட்பிரவேசிக்க கூடிய விசேட மாபிள்களை கொண்ட நடைபாதையினையும் வட பகுதியில் அமைக்க வேண்டுமென வன்னி விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் எஸ்.ரூபராஜ் சமூக சேவைகள் அமைச்சிற்கு கடிதம் மூலமாக கோரியுள்ளார். (90)



யாழ்.இந்துக் கல்லூரியின் 'இந்துக்களின்' போர் கிரிக்கெட் போட்டிக்கான உத்தியோகபூர்வ பாடல் இந்துவின் இசைகள் அணியினால் அண்மையில் வெளியிடப்பட்டது. (48)

## வற்றாப்பளை அம்மனுக்கு பக்திபூர்வ உற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பங்குனித்திங்கள் உற்சவம் கடந்த திங்கட்கிழமை மிக சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் விசேடபூஜை வழிபாடுகள் ஆரம்பமாகியதுடன் அடியார்கள் பொங்கல் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் பெருமளவான பக்தர்களும் கலந்துகொண்டனர். (67)

## கடைத்தொகுதியை வழங்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா நகரசபைக்கு முன்னால் வர்த்தகத்தில் ஈடுபடும் அங்காடி வியாபாரிகளுக்கு யாழ் வீதியில் புதிதாக கட்டப்படும் தனியார் பஸ் நிலைய தொகுதியில் கடைத் தொகுதியை வழங்குமாறு வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் சந்திரகுமார் (கண்ணன்) கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

புதிதாக யாழ்.வீதியில் கட்டப்படும் தனியார் பஸ் நிலைய தொகுதியில் முன்னுரிமை அடிப்படையில் வவுனியா வர்த்தகர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு கடைத்தொகுதியை வழங்க வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார். (70)

## கரணவாய் தெற்கு வீதி புனரமைப்பு எப்போது?

(கரணவாய்)

கரணவாய் தெற்கு பிரதான வீதி நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி சேதமடைந்து காணப்படுவதால் இதனூடாகப் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

ஜே/350, ஜே/348 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய இவ்வீதியை புனரமைக்குமாறு உரியவர்களிடம் தெரியப்படுத்தியும் இதுவரை இவ்வீதியை திருத்துவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இவ்வீதியால் நாளாந்தம் அதிகளவான மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், விவசாயிகள் எனப்பலர் பயணம் செய்கின்ற நிலையில் இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.(18)

## "மகுடபங்கம்" நாடக நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

கலைஞர் வ.ஏழுமலைப்பிள்ளையின் மகுடபங்கம் நாடக நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 25ஆம்திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

தென்னிந்திய சினிமா உட்பட இலங்கை திரைப்படங்கள் பலவற்றில் நடித்தவரும்,பல பாரம்பரிய நாடகங்களில் நடித்து வருபவருமான அகில இலங்கை சமாதான நீதவானும், கரைச்சி பிரதேச மத்தியஸ்தர்சபை உறுப்பினருமான வ.ஏழுமலைப்பிள்ளை எழுதிய 'மகுடபங்கம்' நூலே வெளியிடப்படவுள்ளது.

அருட்தந்தை யோசுவா தலைமையில் கரைச்சி பிரதேச செயலக கலாசார பேரவையினால் வெளியிடப்படும் இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு நூல் வெளியீட்டு உரையை பாரதிபுரம் முதல்வர் பெ.கணேசன், நூல் நயப்புரையினை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். வாழ்த்துரையினை ஓய்வுபெற்ற அதிபர் க.இராஜேந்திரன் ஆற்றவுள்ளார். (29)

## யாழ்.எயிட் நிறுவனத்தால் வேலணை மாணவர்களுக்கு உதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்.எயிட் நிறுவனம் மேற்கொண்டு வரும் நலிவுற்ற மாணவர்களின் கல்விக்கான உதவித்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.எயிட் ஸ்தாபகர் தி.நடனசபேசனின் பணிப்புரைக்கமைய சமூக சேவையாளர்களும் கனடா வாழ்.புலம்பெயர் ஈழத்தமிழர்களுமான தி.சத்தியமூர்த்தி செல்வி ச.அஞ்சனா ம.பிறேம்குமார் ஆகியோரின் அனுசரணையில் வேலணை பிரதேச செயலகரின் வேண்டுகோளுக்கு இணங்க வேலணைப் பிரதேச நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறான உதவிப் பொருட்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற இந்நிழ்வில் பிரதம விருந்தினராக வேலணை வர்த்தக வங்கி முகாமையாளர் பூ.மதியுகன் மற்றும் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா(போல்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் இந்நிகழ்வில் யாழ்.எயிட் பணிப்பாளர், கிராம அலுவலர்கள், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகஸ்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (63,114,48)

## முரசின் இன்றைய பலன்



(21.03.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 07 ஆம் திகதி.
பஞ்சமி / சித்தம். விசாக நட்சத்திரம் பி.ப. 03.30 வரை.
பின் அனுசம்.
இராகு காலம் 10.47 - 12.17 வரை. சுபநேரம் 06.17 - 07.47 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உடன் பிறந்தவரின் நெடுநாள் அபிலாசையை பூர்த்தி செய்தல், தொழில் ரீதியான சந்திப்பு சந்தோஷத்தைத்தரல். |
| ரிஷபம் | மனக் குறைதீர தெய்வ தரிசனத்திற்காகப் புறப்படல், பிரமுகரின் சந்திப்பால் தொழில் பெறும் நம்பிக்கை. |
| மிதுனம் | சட்டவிரோத பொருட்கள் விற்பனை செய்ததால் தண்டம், திறமையை வெளிப்படுத்த வரும் சந்தர்ப்பத்தைக் கௌவிப்பிடித்தல். |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சிக்காக விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படல், தொழில் ரீதியான பயணங்கள் வெள்ளியைத் தக்க வைத்தல். |
| சிம்மம் | ஆசை வார்த்தைகளில் மயங்கி ஏமாறும் நிலை ஏற்படல், எதிர்பார்த்த உதவி தக்க சமயத்தில் கிடைத்தல். |
| கன்னி | நிலுவையைச் செலுத்தத்தவறியமையால் மின் இணைப்பு துண்டித்தல், நீண்ட நாட்களாக இழுபட்டுக் கொண்டிருந்தது நிறைவடைதல். |
| துலாம் | கௌரவப்பிரச்சினையை முன்னிட்டு நிகழ்வுக்குச் சமூகமளிக்காமை, பசப்பு வார்த்தையை நம்பாததால் துயர் ஏற்படாமை. |
| விருச்சிகம் | சொத்துப் பகிர்வு சம்பந்தமாக குடும்பத்தில் களோபரம் ஏற்படல், தேங்கிய வேலைப் பளுவினை முடித்து வைக்க சக ஊழியர்கள் ஒத்துழைப்பு நல்கல். |
| தனுசு | பக்குவமாக எடுத்துச் சொன்னதால் ஏற்கும் மனப்பாங்கு மலர்தல், உணர்ச்சி வசப்படாமையினால் காரியம் சிதறவிடாது பாதுகாத்தல். |
| மகரம் | புத்திமதியை அலட்சியம் செய்த பிள்ளையைப் பற்றிய காட்டம் ஏற்படல், கடந்த கால இழப்பினை, துயரை எண்ணி கவலையில் மூழ்குதல். |
| கும்பம் | பிள்ளையின் மன அழுத்தம் கண்டு கவலையில் பெற்றோர் ஆழ்ந்து விடல், பல வீனத்தை அறிந்தினால் உதவி செய்ய வெளிக்கிட்டதை கைவிடல். |
| மீனம் | கவலைகள் மறைவதால் குடும்பத்தில் கவின் நிலை ஏற்படல், உங்களின் திறமைகளை அதிகாரிகள் பாராட்டிக் கௌரவ மளிப்பர். |

# சூப்பர் 10 ஆட்டங்கள் இன்று ஆரம்பம்

## முதல் ஆட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் பலப்பரீட்சை

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

(மிர்பூர்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் சூப்பர் 10 சுற்றுப் போட்டிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

ஐ.சி.சி.யின் ஐந்தாவது ருவென்ரி-20 தொடர் பங்களாதேஷில் கடந்த 16ஆம் திகதி ஆரம்பமானது. இதில் முதல் சுற்று எனப்படும் தகுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஏ பிரிவில் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், ஹொங்கொங், நேபாளம் மற்றும் பி பிரிவில் அயர்லாந்து, சிம்பாப்வே, நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என 8 அணிகள் பங்கேற்ற முதல் சுற்றுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைகிறது. இதில் அயர்லாந்து, நெதர்லாந்து அணிகள் மோதவுள்ளன. இரு பிரிவிலும் முதல் இடத்தைப் பிடிக்கும் அணிகள் 2ஆவது சுற்றில் முக்கிய அணிகளுடன் மோதும். இதில் பங்களாதேஷ், அயர்லாந்து அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெறக்கூடிய அதிக வாய்ப்பு உள்ளது.

2ஆம் சுற்றுப் போட்டிகள் இன்றிலிருந்து ஆரம்பிக்கின்றன. இதில், 10 அணிகள் 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவில் இலங்கை, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பி பிரிவில் தகுதி பெறும் அணி மற்றும் 2ஆவது பிரிவில் மேற்கிந்தியத்தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, ஏ பிரிவில் தகுதி பெறும் அணியும் இடம் பெற்றுள்ளன.

இன்று மிர்பூரில் நடைபெறும் 2ஆவது சுற்றின் முதல் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

இதேவேளை, இரண்டாவது சுற்றில் இரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் 4 அணிகளும் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறும். அரையிறுதியில் வெற்றி பெறும் 2 அணிகள் ஏப்ரல் 6ஆம் திகதி மிர்பூரில் நடைபெறும் இறுதிப் போட்டியில் பங்கேற்கும்.

## களத்துக்கு வெளியில்

ஐ.பி.எல். தொடரில் டில்லி டேர் டெவில்ஸ் அணி கப்டனாக கெவின் பீற்றர்சன் தேர்வு செய்யப்பட்டாலும் அவர் மீண்டும் இங்கிலாந்து அணியில் இடம்பெற வாய்ப்பே இல்லை. அவரது காலம் இங்கிலாந்து அணியில் முடிந்து போன கதை என இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் தலைவர் கில்ஸ் கிளார்க் கூறியுள்ளார்.

உலகக் கோப்பை ருவென்ரி-20 தொடரில், இந்திய அணி ஆரம்பத் துடுப்பாட்ட ஜோடியில்மாற்றம் செய்ய வேண்டும். ரோகித் சர்மாவுக்குப் பதிலாக ரஹானேவை தவானுடன் களமிறக்க வேண்டும். இலங்கையுடனான பயிற்சிப் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்ததை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். அமித் மிஸ்ராவை பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

மீண்டும் அணிக்குத் திரும்ப வேண்டுமென கருதி ஐ.பி.எல். போட்டியில் விளையாடவில்லை. ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியின் வெற்றிக்காக மட்டுமே பாடுபடுவேன். என் சொந்த தேவைக்காக பயன்படுத்திக் கொள்ள மாட்டேன் என கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

## பிளிஸ்சிஸ், ஸ்ரெய்ன் தசைப்பிடிப்பால் அவதி

(டாக்கா)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் ருவென்ரி-20 கப்டன் டு பிளிஸ்சிஸ், வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் இருவரும் தொடையில் தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வருகிறார்கள். காயத்துக்கு சிகிச்சை பெற்று வரும் அவர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான கடைசி பயிற்சி ஆட்டத்தில் விளையாடவில்லை.

ருவென்ரி-20 உலகக் கோப்பையில் தென்னாபிரிக்க அணி தனது முதல் ஆட்டத்தில் நாளை இலங்கையுடன் மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் இவர்கள் இருவரும் களம் இறங்குவது சந்தேகம் தான்.

உடற்தகுதி பெறுவார்களா? என்பது போட்டிக்கு முன்பாகத் தான் முடிவு செய்யப்படும். பிளிஸ்சிஸ் ஆட முடியாமல் போனால், டிவில்லியர்ஸ் அணியை வழிநடத்துவார் என தென்னாபிரிக்க கிரிக்கெட் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவாக்கின் இலக்கு பஞ்சாபிற்கு கிண்ணம்



(புதுடில்லி)

பஞ்சாப் அணிக்கு கிண்ணம் வென்று கொடுப்பதே எனது தற்போதைய இலக்கு. உள்ளூர் போட்டிகளில் மகிழ்ச்சியுடன் பங்கேற்று வருகின்றேன் என அதிரடி வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரராக திகழ்ந்த சேவாக் தற்போது அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வருகிறார். மோசமான ஆட்டத் திறன் காரணமாக புறக்கணிக்கப்பட்டு வரும் அவர் ஐ.பி.எல். 7ஆவது சீசனில் பஞ்சாப் அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளார். இந்நிலையில் அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு என்னால் கிரிக்கெட் விளையாட முடியும்.

அதற்கான திறமை என்னிடம் உள்ளது. தற்போது ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்கு கிண்ணம் வென்று கொடுப்பதே எனது இலக்கு. உடற்தகுதியிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறேன். பந்து வீச்சை துல்லியமாக கணித்து விளையாடுவதற்காகப் பல மணிநேரம் பயிற்சி எடுக்கிறேன். 2015 உலகக் கோப்பையில் இடம் பெறுவேனா என்பது தெரியவில்லை. எனினும் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூர் அளவிலான போட்டிகளில் மகிழ்ச்சியுடன் ஆடி வருகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்

## முர்ரே திடீர் பிரிவு

விம்பிள்டன் சம்பியனான பிரித்தானியாவின் ரென்னிஸ் வீரர் ஆண்டி முர்ரே, தனது பயிற்சியாளர் அமெரிக்க ஜாம்பவான் இவான் லெண்டிலை விட்டு திடீரென பிரிந்துள்ளார். 2 ஆண்டு கால உறவை சுமுகமாக முடித்துக் கொண்டதாக இருவரும் கூறியுள்ளனர். அவரது பயிற்சியின் கீழ் ஒலிம்பிக்கில் தங்கம், அமெரிக்க ஓப்பன், விம்பிள்டன் பட்டத்தை முர்ரே வென்றது குறிப்பிடத்தக்கது.

## இடைக்காலத் தடை

(கொழும்பு)

வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடாத்த இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கைக்கால்பந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை நடைபெறவிருந்தது. இந்நிலையில் இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்தக் கூடாது என கொழும்பு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரணை செய்த நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, பொதுக்கூட்டத்தை தடுத்து நிறுத்துமாறு இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவைச் சேர்ந்த அறுவர் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்திடம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## முன்னேற்றம்

(மியாமி)

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் ரஷ்யாவின் நடியா பெட்ரோவா வெற்றி பெற்றார்.

அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் மியாமி ஓப்பன் ரென்னிஸ் தெடர் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ரஷ்யாவின் நடியா பெட்ரோவா, போலந்தின் உருசுலா ரத்வன்ஸகாவை எதிர் கொண்டார். முதல் செட்டை 7-5 என கைப்பற்றிய பெட்ரோவா, இரண்டாவது செட்டை 1-6 என பறிகொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் சுதாரித்த பெட்ரோவா 6-4 என தன்வசப்படுத்தினார். முடிவில், நடியா பெட்ரோவா 7-5, 1-6, 6-4 என வெற்றி பெற்றார்.

## வெளியானது அட்டவணை

(புதுடில்லி)

7ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் மூன்று கட்டமாக நடைபெறவிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக அறிவித்தது. 7ஆவது ஐ.பி.எல் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 20 போட்டிகள் நடைபெறுகிறது. ஏப்ரல் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 30ஆம் திகதி வரை, அபுதாபி, டுபாய், சார்ஜா ஆகிய நாடுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. அபுதாபியில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் மும்பை-கொல்கத்தா அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மூன்று கட்டங்களாக மூன்று நாடுகளின் போட்டி நடைபெறவிருப்பதால் எதிர்பார்க்கும் வருமானத்தை ஈட்டிக்கொள்வது கடினம் என இந்திய கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


## சங்கா, மஹேல மதிக்கவில்லை

(கொழும்பு)


வீரர்கள் இடத்தில் வெளிப்படைத் தன்மையுடனேயே பழகி வருகின்றேன். ஆனால், சிரேஷ்ட வீரர்களான சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் இதனை மதிக்கவில்லை. இதன் காரணமாகவே உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருடன் ருவென்ரி-20 போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அவர்கள் எடுத்த முடிவு வெளிப்படுத்தியிருக்கின்றது என இலங்கை அணியின் தேர்வுக்குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய கவலை தெரிவித்துள்ளார்.


சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோரிடம் கௌரவமாகவே பழகி வருகின்றேன். குறிப்பாக அனைத்து வீரர்களுடனும் வெளிப்படைத் தன்மையுடனும், இணக்க தன்மையுடனும் தான் பழகி வருகின்றேன். இதுவரை சிரேஷ்ட வீரர்களுடன் முட்டிக்கொண்டதில்லை.

ஆனால், உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் பின் ருவென்ரி-20 தொடரிலிருந்து விலகுவதாக சங்காவும், மஹேலவும் அறிவித்திருக்கின்றார்கள். இதனை ஊடகங்கள் மூலமே அறிந்து கொள்ள முடிகின்றது. கிரிக்கெட் சபையின் தேர்வாளர் என்ற முறையிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ என்னுடன் தொடர்பு கொண்டு ஓய்வு குறித்து ஆலோசித்திருக்கலாம். இது மிகுந்த வேதனை அளிக்கும் ஒன்றாகவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# இந்துக்களின் சமர் இன்று ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணிகளுக் கிடையிலான இந்துக்களின் போர் என் வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்று யாழ். இந்துக் கல் லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை வரை நடைபெறவுள்ள இப்போட்டிக்கு யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு ஜே. கல் கோபனும், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணிக்கு பி. கிரிதர்ஷனும் தலைமை தாங்குகின்றன.

யாழ். இந்துக் கல்லூரி அணியில் வழதி, ஆர். றுக்ஸ்மன், எம். துவாரகன், எஸ். சாரங்கன், யூ. கிரிசாந்த், கே. டானியல், கே. பிரணவன், ஜீ. மதுன். வி.வைகரன், எஸ். நிஷன், வி. ஜிந்து ஜன், கே. கஜன், ஆர். கஜநாத். ஜே. உதயன், ஜிதுசனன், எல். சிவலக்ஷன் ஆகியோரும்,

கொழும்பு பம்பலப்பிட்டி அணியில் யசோ தரன், ஷரூன், கஜேந்திரன், பதீஷன், ஹரிகரன், ஸ்டீவன், இந்த்ரஜீத், சிந்துஜன், ஸ்ரீகார்த்திகேயன், திவாகர், மதுஷன், என். கிரிஷான், தர்ஷிகாந்த் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

இப்போட்டித் தொடர் இரு கல்லூரிகளின் உறவுகளை வளர்க்கும் முகமாகவும், வீரர்களின் திறனை அடுத்த நிலைக்கு உயர்த்தும் வகை யில் நடாத்தப்படுகின்றது என கல்லூரிச் சமூ கத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது.

(93,48)

## விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய ஆட்டம்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கால்பந்துப் போட்டித் தொடரை ஒற்றுமை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடாத்தி வரு கின்றது. இன்றைய தினம் நடைபெறவுள்ள போட்டி களில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணியும், மைக்கல் அணியை எதிர்த்து கலை மதி அணியும் மோதவுள்ளன. இப்போட்டித் தொடர் விலகல் முறையில் நடாத்தப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

## இறுதியில் கார்மேல் போய்ஸ்

(உடுவில்)

உடுவில் உதயசூரியன் விளையாட்டு கழகத்தினால் நாடத்தப்பட்டுவரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு குருநகர் கார்மேல் போய்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையே மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை நடாத்தி வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை உதயசூரியன் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும், கொக்கு வில் ஸ்ரீகாமாட்சி அணியும் மோதின. இதில் கர வெட்டி ஞானம்ஸ் அணி வெற்றிபெற்று அரையிறு திப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும், குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய குருநகர் கார்மேல்போய்ஸ் அணி நிர்ணயிக் கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட் டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 61 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கரவெட்டி ஞானம்ஸ் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தவியது. இதன்மூலம் குருநகர் கார் மேல்போய்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

விரைவில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் உடுவில் சலேஞ்சர் அணியை எதிர்த்து குருநகர் கார்மேல்போய்ஸ் அணி மோதவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (48)







# வலய மட்ட வலைப்பந்தாட்டம்

## அராலி சரஸ்வதி இரு பிரிவுகளில் சம்பியன்

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடை யிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி யில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி இரு பிரிவுகளில் சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளது.

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடை யிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 மற்றும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் நடைபெற்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 16-06 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தை வென்றது. இப்பிரிவில் மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. சுழி- புரம் விக்டோரியக் கல்லூரி அணி 12-09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப். போட்டியில் சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி அணியும், அராலி சரஸ்வதி மகாவித்தி யாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடை பெற்ற இப்போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 18-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வலய மட்ட சம் பியன் பட்டத்தை வென்றது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி யும் மோதின. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல் லூரி அணி 14-09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.


19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி எதிர்வரும் 7,8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலய உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார். (93)

கேடுகளால் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு மிகப்பெருமளவில் சாதகமான பதில்களைத் தருவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தேவை என பகிரங்கமாக அறிவித்துள்ளதின் அர்த்தம் என்ன?

ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட மிகவும் தீமையான நிபுணர் குழாம் கூட தேசியக் கூட்டமைப்பு எல்.ரீ.ரீ.ஈயின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என இப்போது விடுத்துள்ள அழைப்பு போதுமானளவு கவனத்தை ஈர்த்துள்ள அது தமிழர்களுக்கு கடினமான ஒன்றாகவும் மற்றும் தமிழ் அமைப்புகள் அதை நிராகரிக்கும் என்பதாலும் அவற்றை மூடிமறைக்கும் சாத்தியம் உள்ளது. தமிழர்கள் மத்தியில் புலிகள் பற்றிய நேச உணர்வுகளுக்கு உயிரூட்டவும் மற்றும் தமிழ் கிளர்ச்சி மீண்டும் உயிர் பெறலாம் என்கிற அச்சத்தை சிங்களவர்கள்

# இரு தரப்பு அத்துமீறல்களையும் விசாரிக்க அழைப்பு விடுக்கும் தமிழத் தேசியக் கூட்டமைப்பு

—— டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.ஏ), "25ஆவது ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் சமர்ப்பிக்கப் படவிருக்கும் இலங்கை பற்றிய நகல் வரைபை கவனமாக ஆராய்ந்த பின்னர்" கடந்த வாரம் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ரி.என்.ஏ. தலைவர் சம்பந்தன் மற்றும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோரால் கூட்டாக ஒப்பமிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பது வருமாறு:

"எனவே நாங்கள் வரைவுத் தீர்மானம், மனித உரிமைகள் சபை உயர் ஆணையாளர் தலைமையில் யுத்தகாலத்தில் இருதரப்பினராலும் நடத்தப்பட்ட துஷ்பிரயோகங்கள் மற்றும் போர் முடிவடைந்ததிலிருந்து நாடு முழுவதிலும் இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் என்பன பற்றி ஒரு சர்வதேச விசாரணையை தோற்றுவிக்க உதவுகிறது என்கிற காரணத்தால் அதை நாங்கள் வரவேற்கிறோம்".

சம்பந்தன் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரின் கூட்டறிக்கை மேலும் தெரிவிப்பது, "வரும் வாரங்களில் இணை அனுசரணையாளர்கள் வரவிருக்கும் விசாரணைகளின் நோக்கங்களை வலுப்படுத்துவதற்கும் மற்றும் தெளிவுபடுத்துவதற்கும் ஏற்ற திருத்தங்களை இந்த வரைபில் மேற்கொள்வார்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்த முடிவுக்காக நாங்கள் சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்து தொடர்புகளை மேற்கொண்டிருப்பதுடன், இந்தத் தீர்மானத்தின் விளைவுகள் இலங்கை மக்களுக்கு, குறிப்பாக போரின்போதும் அதன் பின்னரும் இழைக்கப்பட்ட படு மோசமான முறை எதிர்பார்க்கிறோம்" என்று.

ரி.என்.ஏயின் அறிக்கை பின்வரும் குறிப்புகளுடன் முடிவடைந்திருக்கிறது. "ஒரு தீர்மானம் ஒன்றை இயற்றுவதற்கு பரிசீலனையில் இருக்கும் வரிகள், இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பனவற்றை நோக்கி மனித உரிமைச் சபை எடுத்து வைக்கும் அடுத்த முக்கியமான படியாக இருக்க வேண்டும். அத்தோடு சர்வதேச சமூகம், இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட கடந்தகால மீறல்கள் அதே போல நாடு முழுவதிலும் தொடர்ந்து இடம்பெற்று வரும் மீறல்கள் என்பனவற்றைப் பற்றி விசாரணையை மேற்கொள்வதற்கு தக்கதாக ஒரு சர்வதேச ஆணைக்குழுவை நியமிக்கும் நோக்கில் விரைவாக நகரவேண்டும் என்பதை ரி.என்.ஏ தொடர்ந்து வலியுறுத்தும்"

ரி.என்.ஏ யின் அறிக்கையின் அழுத்தம் அடிப்படையில் ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிரானதாக இருந்தபோதிலும், அதை நுணுகி ஆராயும்போது ரி.என்.ஏ யின் அறிக்கை ஒரு பகுதியினரை மட்டும் மட்டுப்படுத்தியதாக இருக்கவில்லை. இரு தரப்பினரும் என ரி.என்.ஏ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி "மற்றக் கட்சியினராக" குறிப்பிடப்பட்டுள்ளது புலிகள் என அறியப்படும் எல்.ரீ.ரீ.ஈ யிரைத்தான் என தெரியவருகிறது.

எல்.ரீ.ரீ.ஈ யின் பிரதிநிதிகள் அல்லது புலிகளினால் தெரிவு செய்யப்பட்ட முகவர்கள் என தாக்குதல் தொடுக்கப்படும் ரி.என்.ஏ, சற்று நாணத்துடன் மறைமுக வார்த்தையாக இரு தரப்பினரும் எனக் குறிப்பிட்டிருந்தாலும், இலங்கை ஆயுதப்படைகள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ ஆகிய இரண்டும் செய்த குற்றங்குறைகளைப் பற்றி ஆராய ஒரு சர்வதேச விசாரணை தனது அறிக்கையில் எல்.ரீ.ரீ.ஈ புரிந்த மோசமான மீறல்களைச் சுட்டிக்காட்டியுள்ளது. தருஸ்மான் குழு என பொதுவாக அறியப்படும் அந்தக் குழு தனது அறிக்கையில் சொல்லியிருப்பது, "இறுதிக்கட்ட போரின்போது எல்.ரீ.ரீ.ஈ, சாத்தியமான ஆறு முக்கியமான பிரிவுகளின்கீழ் குற்றம் புரிந்துள்ளதுக்கு அடையாளமாக நம்பிக்கையான குற்றச்சாட்டுகள் வந்துள்ளதாக குழு முடிவு செய்துள்ளது: பொதுமக்களை மனித தடுப்புகளாகப் பயன்படுதியது, எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தப்பி ஓடமுயன்ற பொதுமக்களை கொலை செய்தது, பொதுமக்களுக்கு அருகில் இராணுவ தளபாடங்களை பயன்படுத்தியது, சிறுவர்களை கட்டாயமாக படையில் இணைத்தது, கட்டாய வேலை செய்வித்தது மற்றும் தற்கொலைத் தாக்குதல் மூலம் பொதுமக்களைக் கொன்றது"


ஐ.நா. நிபுணர் குழுவே எல்.ரீ.ரீ.ஈ புரிந்தாக கூறப்படும் குற்றங்களை சுட்டிக் காட்டியுள்ள சந்தர்ப்பத்தில் ரி.என்.ஏ யின் அறிக்கையிலும் அது காணப்பட வேண்டும். தமிழ் தாகத் தெரியவில்லை.

இதற்கான ஒரு காரணம் ராஜபக்ஷ ஆட்சிதான் பெரும்பாலான நேரங்களில் இது சம்பந்தமாக உலகின் கவனத்தை ஏகபோகமாக ஈர்த்து வந்துள்ளது. மனித உரிமைகள் அமைப்புகள் தொடங்கி தொலைக்காட்சி சேவைகள் வரை முக்கிய அல்லது தனித்துவமான இலக்காக காணப்பட்டது இலங்கை அரசாங்கம் மட்டுமே. ஆகவே எல்.ரீ.ரீ.ஈ புறக்கணிக்கப்பட்டது அல்லது கவனிக்காமல் விடப்பட்டது எனக் கூறலாம்.

முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் சபை உயர் ஆணையாளரும் மற்றும் தற்போதைய சர்வதேசக் குழுவின் தலைவருமான லூயிஸ் ஆர்பர், நியுயோர்க் டைம்ஸ்க்கு சமீபத்தில் வெளியிட்டிருந்த ஒரு கருத்துப் பத்தியில் ஒரு சர்வதேச விசாரணைக்குழுவின் அவசியம் பற்றி வலியுறுத்தியிருந்தார். அந்தக் கட்டுரையில் லூயிஸ் ஆர்பர் தனது அவதானிப்பை இப்படிக் கூறியிருந்தார் "ஒரு ஆணைக்குழு கூட தோல்வியடைந்த எல்.ரீ.ரீ.ஈ-யின் மீறல்களுக்கான சாட்சிகளை மத்தியில் எழுப்பவும் மற்றும் தொடர்ச்சியான இராணுவ மயமாக்கலுக்கும் மற்றும் அடக்குமுறையை மேற்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு ஒரு சாட்டாகவும் இது அமையலாம்".

மதிப்புக்கு உரியவர்களான லூயிஸ் ஆர்பர் போன்றவர்களின் எதிர்பார்ப்புகளைக் காட்டிலும் புலிகள், புலிகள் சார்பானவர்கள் மற்றும் இலங்கையிலும் மற்றும் புலம் பெயர்ந்தவர்களிடையேயும் உள்ள புலிகளின் சக பயணிகள் ஆகியோர். சர்வதேச ஆணைக்குழு ஒன்றின் விசாரணையை எல்.ரீ.ரீ.ஈயும் எதிர்நோக்க வேண்டிய சாத்தியம் உள்ளது என்பதில் அதிக அக்கறை கொண்டவர்களாக இருப்பதாகத் தோன்றவில்லை. உலகளாவிய தமிழ் புலம் பெயர்ந்தவர்களிடையே உள்ள புலி மூலகங்கள் இப்போது மனித உரிமைக் காவலர்களாக அவதாரம் எடுத்துள்ளார்கள். ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணையை கோரி நடத்தப்பட்டு வரும் பலபக்க உலகளாவிய பிரசாரத்தில் அவர்கள்தான் முன்னணியில் நிற்கிறார்கள்.

# முடி உதிர்தலுக்கு நிரந்தர தீர்வு



உலக அளவில் ஆண்கள் மத்தியில் மிகப்பெரிய பிரச்சினைகளில் வழுக்கைத்தலை மிக முக்கிய ஒன்றாக விளங்குகின்றது.

வழுக்கையைத் தடுக்கும் மருந்துகள், முடி உதிராமல் தடுக்கும் மருந்துகள், உதிர்ந்த முடி வளர்க்கும் மருந்துகள், கடைசியாக முடிமாற்று அறுவைச் சிகிச்சை முறை என்று பலவகை மருத்துவ தீர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் இவை நிரந்தரத் தீர்வைத் தரவில்லை என்றே பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய இராச்சியத்தில் இருக்கும் டர்ரம் பல்கலைக்கழகமும், அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக மருத்துவ மையமும் இணைந்து செய்த ஆய்வின் முடிவில் மனிதர்களின் முடியை செயற்கையாக வளர்ப்பதற்க்கான புதிய உத்தி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்களின் முடியின் அடிப்பகுதியில் இருக்கும் நுண்ணிய திசுக்களை எடுத்து அவற்றை பரிசோதனைக் கூடத்தில் ஊட்டச்சத்து மிக்க சூழலில் வளர்த்து, வழுக்கையான பகுதியில் இருக்கும் தோலுக்கு அடியில் வைத்தால் அந்தப் பகுதியில் இருந்து புதிதாக முடிவளர்க்க முடியும் என்று விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கிறார்கள். மொத்தம் ஏழு பேரிடம் செய்த பரிசோதனைகளில் ஐந்து பேருக்கு ஆறு வாரங்களில் புதிய முடி வளர்வதை இவர்கள் கண்டிருக்கிறார்கள்.

இந்த ஆய்வின் முடிவில் வழுக்கையை முழுமையாக நிரந்தரமாக குணப்படுத்த முடியும் என்பதற்கான சாத்தியக்கூறை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த சிகிச்சை முறை எதிர்காலத்தில் வழுக்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(நன்றி: Jaffna Diabetic Centre)

## சினிமா

◗ "இரண்டாம் உலகம்" படத்துக்குப் பின் செல்வராகவன் இயக்கும் படத்தில் சிம்பு கதாநாயகன். சிறிது கால இடைவெளிக்குப் பின் செல்வராகவனுடன் இப்படத்தில் இணைகிறார் யுவன்ஷங்கர் ராஜா. சிம்பு ஜோடியாக த்ரிஷா. "புதுப்பேட்டை", "மயக்கம் என்ன" ஆகிய படங்களில் இதற்கு முன் த்ரிஷாவே நடிக்க வேண்டும் என விரும்பியிருந்தாராம் செல்வராகவன்.

◗ சில நாட்கள் காணாமல் போயிருந்த நடிகை ஸ்ரேயா.

# அஃகம் சுருக்கேல் ஒளவியம் பேசேல் 8

நாஞ்சில் நாடன்

சங்க இலக்கியம் ஒளகாரம் பயன்பட்ட பல சொற்களை ஆண்டிருக்கிறது.

கெளவை எனும் சொல் அலர் தூற்றுதல் எனும் பொருளில் சங்கம் ஆள்கிறது. அகநானூற்றின் 50ஆவது பாடல், நெய்தல் திணைப் பாடல், கருவூர்ப் பூதஞ்சாத்தனார் பாடியது:

"கடல்பாடு அவிந்து, தோணி நீங்கி,
நெடு நீர் இருங் கழிக் கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கெளவை தூற்றினும்"

எனும் வரிகளில், கெளவை எனில் பழிச் சொல் அல்லது அலர் தூற்றுதல் என்று பொருள் சொல்கிறார்கள்.

குளிர்ந்த கடற்கரையை உடைய நம் தலைவன், முன்பு கடல் ஒலி அவிய, தோணி கடலில் செல்லாது ஒழிய, மிக்க நீரினை உடைய பெரிய கழியில் சுறா முதலியன செருக்கித் திரியினும், கொடிய வாயினை உடைய பெண்கள் அலர் தூற்றினாலும் பெருமை மிகு இழையினை உடைய நீண்ட தேர் தாழ்ந்து நிற்க, பகற்காலத்தும் நம்மிடத்து நின்று பிரியாதவனாக, அடுத்தடுத்து வருவான் என்று தோழி பாணனுக்குச் சொல்வதாகப் பொருள் வளர்ந்து நடக்கும் வரிகள்.

நற்றிணையில் "தெளவின" எனும் சொல் இழந்தன எனும் பொருளில் கையாளப்படுகிறது. அம்மூவனார் பாடல், தலைவி தோழிக்கு உரைப்பது போன்று:

"தோளும் அழியும், நாளும் சென்றன,
நீள் இடை அத்தம் நோக்கி, வான் அற்று
கண்ணும் காட்சி தெளவின"

என்பன பாடல் வரிகள். அத்தம் - வழி, வாள் - ஒலி, தெளவின - இழந்தன.

"நெளவி" எனும் சொல் மானின் வகை எனும் பொருளில் ஆளப்பட்டிருக்கிறது. "பெருங் கவின் பெற்ற சிறு தலை நெளவி" என்பது மதுரைக் காஞ்சி. கவின் எனில் அழகு என்று பொருள்.

"பெளவம்" எனும் சொல் கடல் எனும் பொருளில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"தண் பெரும் பெளவ நீர்த் துறைவற்கு"

என்று கபிலர் பாடிய நற்றிணைப் பாடல் பேசுகிறது.

பாண்டியன் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதியைக் காரி கிழார் பாடுகிறார்:

"வடா அது பனி படு நெடுவலை வடக்கும்,
தெனா அது உருகெழு குமரி
யின் தெற்கும்,
குணா அது கரையொரு
தொட கடற் குணக்கும்,
குடா அது தொன்று
முதிர் பெளவத்தின்
குடக்கும்"

என்று எல்லைகளை வரையறுக்க. எளிய பொருள், வடக்கு இமயமலை, தெற்கே குமரிக்கடல், கிழக்கே ஆழ்கடல், மேற்கே பழமையான கடல் என்பதாகும்.

திரைப்பாடல் ஒன்றில் இன்று ஆம்பல், மெளவல் எனும் சொற்கள் ஆளப்பட்டுள் ளன. ஆம்பல் தெரியும், மெளவல் என்றால் என்ன? காட்டு முல்லை என்று பொருள் தருகிறார்கள்.

"மனை இள நொச்சி மெளவல் வால் முகை" என்று அகநானூறும், "மல்லன் மருங்கில் மெளவலும் அரும்பின" என்று நற்றிணையும், "எல்லுறும் மெளவல் நாறும் பல் இருங் கூந்தல் யாரளோ நமக்கே?" என்று குறுந்தொகையும் மெளவலைப் பேசுகின்றன.

"வெளவல்" எனும் சொல் பற்றுதல் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டது.

பற்றுதல் என்பது கவர்தல் என்றும் பொருள் தரும். புறநானூற்றில் மாங்குடிக் கிழார், "முரசு வெளவி" என்று பாடுகிறார்.

ஏற்கனவே ஒளகாரத்தை இன்றைய தமிழ் வழக்கு புறக்கணிப்பது என்பது மொழியை வாழவைக்க ஒரு போதும் உதவாது. எனவேதான் ஆத்திசூடியைத் துணை கொண்டு நாம் ஒளகாரம் பார்த்தோம். ஒளவியம் என்பதற்குப் பொருந்திய பொருள் அழுக்காறு.

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

என்பது திருக்குறள். பொறாமை, ஆசை, வெகுளி, இன்னாச்சொல் இந் நான்கையும் நீக்கிச் செய்யப் பெற்ற வினையே அறமாகும். ஆக ஒளவியம் பேசுவது அறத்திற்கு எதிரான செயல்பாடு.

அனுமானைப் பேசும் போது, கம்பன் கூறுவது, "தர்மத்தின் தனிமை தீர்ப்பான்" என்று. அதாவது தர்மம், அறம் என்பது எப்போதும் தனியனாக இருப்பது. அதற்கொரு கூட்டுக் கிடைப்பது எளிதன்று. அனுமன் என்பவன் அறத்தின் தனிமை தீர்த்து அதற்கொரு துணையாக இருக்கும் தன்மை கொண்டவன். அந்த அறத்தின் எதிரி அழுக்காறு.

"அழுக்காறு எனவொரு பாவி திருச் செற்றுத்
தீயுழி உய்த்து விடும்"

என்பதும் திருக்குறள்.

அழுக்காறு என்று சொல்லப்பட்ட ஒப்பற்ற பாவி, செல்வத்தைக் கொடுத்து, நரகத்தின் கண் புகுத்திவிடும் என்பது பொருள்



எனவே, எளிமையாக, ஒரு கட்டளையாக, ஒளவை சொல்வது "ஒளவியம் பேசேல்"!

நாலடியார் பேசுவது:

"அவ்வியம் இல்லார் அறத்தாறு உரைக்குங்கால்
செவ்வியர் அல்லார் செவிகொடுத்தும் கேட்கலார்
கவ்வித்தோல் தின்னும் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளல்தேற்றாது ஆங்கு."

அதாவது, தோலை வாயினால் கவ்வித் தின்னும் நாயானது, பால் சோற்றின் நன் சுவையை அறிந்து கொள்வதில் தெளிவற்று இருக்கும். அது போல, அழுக்காறு இல்லாத சான்றோர் அறநெறியை உரைக்கும் போது, நற்குணம் இல்லாத புல்லறிவாளர் செவி கொடுத்தும் கேட்க மாட்டார்கள்.

எனவே ஒளவியம் இல்லாதவர்களே அறத்தின் வழிகள் பற்றிப் பேசத் தகுதியானவர்கள் என்பது பெறப்படும்.

ஆகவே ஒளவை சொல்கிறாள், "ஒளவியம் பேசேல்"



# சினிமா

பாலாவின் கரகாட்டக்காரியில் சசிகுமாருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். ஸ்ரேயாவுக்கு பரத நாட்டியம், கதக், குச்சிப்புடி என பலவகை நடனங்கள் அத்துபடி. கரகாட்டக்காரனில் நடித்த கனகாவை மிஞ்சும் வகையில், கரகாட்டத்தை நேர்த்தியாக ஆடி விட வேண்டும் என்று, கடும் கரகாட்டப் பயிற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளார்.

◗ நான் சிகப்பு மனிதன் படத்தில், "நார்கோலெப்சி" என்ற வியாதியால், பாதிக்கப்பட்டவராக நடிக்கிறார் விஷால். இந்த வியாதி இருப்பவர்கள், திடீர் திடீரென்று தூங்கி விடுவார்களாம். அதனால், காதல் மற்றும் சண்டை காட்சிகளின் போது, தூங்கி விடுவது போன்றும், அதைத் தொடர்ந்து நடக்கும் பல்வேறு விஷயங்களை, புதுமையாக படமாக்கியுள்ளதாக சொல்கிறார் விஷால்.

◗ தன் ட்விட்டரில், தன்னைப் பற்றிய தகவல் மட்டுமின்றி, சில நடிகர், நடிகைகளின் நடிப்பு குறித்தும் விமர்சித்து வருகிறார் சமந்தா.

◗ "அஜித் தான், தமிழ் சினிமாவின் அடுத்த சூப்பர் ஸ்டார்..." என்று சொல்லி வரும் சிம்பு, "அஜித்தின் அடுத்த வாரிசு நான் தான்..." என்றும் கூறி வருகிறார். இந்நிலையில், தான் நடித்து வரும் வாலு படத்தில், தன்னை மற்றவர்கள் அடையாளம் தெரிந்து கொள்ளாமலிருக்க, ஒரு காட்சியில், அஜித் முகமூடியை அணிந்து, நடித்துள்ளார் சிம்பு. அதோடு, தன் கூடவே பைக்கில் வரும் சந்தானத்துக்கு, விஜய் முகமூடி அணிவித்துள்ளார். ஆக, அஜித் - விஜய் இருதரப்பு ரசிகர்களையும், தியேட்டருக்கு இழுக்கும் முயற்சியாகவே, இதை செய்கிறார் சிம்பு. ஆனால், ஹீரோ அஜித், விஜய் காமெடியனா? என்று விஜய் ரசிகர்கள் கொந்தளித்துள்ளனர்.

◗ அமலாபாலும், இயக்குநர் விஜய்யும் இணைந்து திருவனந்த புரத்தில், ஒரு துணிக்கடை திறக்கின்றனர். எதிர்காலத்தில் வாழ்க்கையிலும் இணையவிருக்கும் இருவரும் எட்டு கோடி ரூபாயை இதில் முதலிட்டிருக்கின்றனராம்.



◗ சந்தானம் ஹீரோவாக நடித்து வரும், வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தில், "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்; என் சொல்லே, நண்பர்களுக்கு ஆயுதம்" என்று, "பஞ்ச்" வசனம் வைத்துள்ளார்.

◗ தமிழில், கோபுரவாசலிலே, சிறைச்சாலை மற்றும் சிநேகிதியே உட்பட, பல படங்களை இயக்கியவர் பிரபல மலையாள, ஹிந்திப் படங்களின் இயக்குநரான பிரியதர்ஷன். இவரும், கமலுடன் விக்ரம் படத்தில் நடித்த லிசியும், 1990இல் திருமணம் செய்து கொண்டனர். இவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், கடந்த சில மாதங்களாக பிரிந்து வாழ்கின்றனர். அதையடுத்து, விவகாரத்து கேட்கும் லிசி, ஜீவனாம்சமாக, 80 கோடி ரூபாய் கேட்டுள்ளார். இதனால் ஆடிப்போன பிரியதர்ஷன், "தனக்கு, விவாகரத்து செய்வதில் விருப்பம் இல்லை..." என்று சொல்லி, லிசியுடன் மீண்டும் இணைய, குடும்பத்தார் மூலம் சுமூகமான பேச்சுவார்த்தையை முடுக்கி விட்டுள்ளார்.


◗ சிவா இயக்கத்தில் "வீரம்" படத்தில் நடித்த அஜித் அடுத்து கெளதம் வாசுதேவ்மேனன் இயக்கும் படத்தில் நடிக்கிறார். இப்படத்தில் அஜித்துக்கு சிஐடி வேடம். பொலிவுட்டில் "தம் மாரோ தம்", "காக்கி", "பிளப் மாஸ்டர்" போன்ற படங்களுக்கும், பல புலனாய்வு சீரியல்களுக்கும் திரைக்கதை அமைத்துக் கொடுத்த ஸ்ரீதர் ராகவனை இந்தப் படத்தின் திரைக்கதை உருவாக்கத்துக்குப் பயன்படுத்துகிறார் கெளதம்.

◗ ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தில், நடித்துக்கொண்டிருக்கும் விஜய், அதற்கடுத்து சிம்பு தேவன் இயக்கும் படத்தில் நடிக்கிறார்.

◗ கிரிக்கெட் சூதாட்டத்தின் பின்னணியில் நகைச்சுவையைப் பிரதானமாகக் கொண்டு வரவிருக்கும் படம் "ஆடாம ஜெயிச்சோமடா". இயக்குநர் பத்ரி. இவர் சமீபத்தில் வந்த "தில்லு முல்லு" படத்தை இயக்கியவர்.

◗ மணிரத்னம் இயக்கவிருக்கும் படத்தில், மீண்டும் ஐஸ்வர்யா ராய் நடிக்கிறார். நாகார்ஜுனா, மகேஷ்பாபு இணைந்து நடிக்கும் அப்படத்தில், முக்கிய பாத்திரத்தில் ஐஸ்வர்யாவுக்கு மறுபிரவேசமளிக்கிறார் மணிரத்னம்.



# மீள்குடியேற்றத்தின் பின் மீண்டும் புதுப் பொலிவு பெறும்

# யாழ். அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை

## பாடசாலை வரலாறு

1929 திருவாளர் கனகரெத்தினம் அவர்களால் யாழ். கனகரெத்தினம் ம.ம.வி. ஆரம்பிக்கப்பட்ட சமகாலத்திலே இதுஆரம்பிக்கப்பட்டது. 1 – 5ஆம் வகுப்பு வரை 1ஏக்கர் காணியில அரியாலை கிழக்கு மக்களின் ஆரம்பக் கல்வித்தேவையை இப்பாடசாலையே பூர்த்தி செய்தது. காலப்போக்கில் 1 – 8 வரை உயர்த்தப்பட்டது. பாடசாலையை அரசாங்கம் பொறுப்பெடுத்த பின் ஆசிரியர் விடுதி கட்டப்பட்டது. ஒரு பிரதான கட்டடமும ஏனைய தற்காலிகக் கட்டடமும் இங்கு காணப்பட்டது.



முதியோர் தினவிழாவில் மாணவர்கள் அவர்களிடம் ஆசிபெறல்

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலின்பின் சங்குப்பிட்டி பாதை யூடாக பூநகரி கல்முனை மக்களும் இப்பகுதியில் குடியேறி அவர்களின் பிள்ளைகளும் கல்விகற்றனர் 1995 இடப்பெயர் வின்பின் ஆவணங்கள் தளபாடங்கள் எதையும் எடுக்கவில்லை.

1996 இல் இருந்து யா/அரியாலை ஸ்ரீ பார்வதிபாட சாலையில் சுமார் 80 மாணவர்களுடன் இயங்கிவந்தது 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வுடன யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி யாலயத்துடன் சேர்ந்து இயங்கியது அரியாலை கிழக்குக்குரிய மக்கள் யாழில் பலபாகங்களிலும் சிதறி வாழ்ந்ததால் போக்கு வரத்துப் பிரச்சினை காரணமாக மாணவர்களின் தொகை குறைந்தது. அதனால் 2003இல் அரியாலையில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி மீண்டும் 2004 இல் இருந்து ஸ்ரீபார்வதி



பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பெற்றோர் நிகழ்விற்கான பரிசுவழங்கல்

பாடசாலையில் இயங்கியது. 3 மாணவர் மட்டும் கல்வி கற்றனர் ஆசிரியர் அனைவரும் மாற்றப்பட்டு விட்டனர். விவசாய ஆசிரியை ஒருவர் மட்டும் கடமையாற்றி வந்தார்.

மேற்படி பாடசாலை மீள்குடியேற்றம் செய்யப்பட்டமையால் மாணவர் தொகை அதிகரிப்பதுடன் பாடசாலை பௌதிக வளங் களும் பூர்த்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



விளையாட்டுப் போட்டி ஆரம்ப நிகழ்வு

## அதிபர் திரு.கு.அகிலன்



BED, DIP in tea.
S.L.P.S - ll

### அதிபரின் விசேட அறிக்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி கலாசாரத்தையும் பாரம் பரியத்தையும் பேணிக் காத்துவரும் பாடசாலைகளில் ஒன்று தான் அரியாலைப்பிரதேசத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள யாழ். அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. இப்பாடசாலை யா.கனகரெத்தினம் மகாவித்தியாலயத்தை ஸ்தாபித்த கனகரெத்தினம் அவர்களால் 1926இல் ஸ்தாபிக்கப்பட்டது. இதனை பாடசாலையிலே காணப்படும் பாடசாலை வரலாறு என்ற ஒரு சிறிய நூல் ஆதாரத்தை வைத்து நிறுவ முடிகின்றது. இப்பாட சாலை மீள்குடியேற்றப்பாடசாலை என்பதால் மாணவரது எண்ணிக்கை மிகக்குறைவாக உள்ள போதும் பௌதீகவளமான பாடசாலைக் கட்டடம் ஒரு பெறுமதிமிக்க சொத்தாக பனங்கூடல்கள் வயல்வெளி களிற்கு மத்தியில் காணப்படுகின்றது. இங்கே கல்விச் செயற் பாடுகள் தளம்பல் நிலையில் முன்பு காணப்பட்டாலும் 2013 நடுப்பகுதியில் இருந்து தகுந்த ஆளணி வளங்களுடன் ஒரு சில முக்கிய பாடங்களிற்கு ஆசிரியர்கள் இல்லாத போதிலும் கல்விச் செயற்பாடுகளில் முன்பிருந்ததைவிட கணிசமான முன்னேற்றத்தைக கண்டுள்ளது. எனலாம்.

கால்கோள் விழாக்கள்,முதியோர்தினவிழா, மணிவிழா, இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள், தமிழ்த்தினப்போட்டி களில் பங்குபற்றி இவ்வருடம் எமது பாடசாலை முன்னோக்கி நகரத் தொடங்கியுள்ளது. அது மட்டுமன்றி எமது பாடசாலைக்கு கடந்த மாத நடுப்பகுதியில் இருந்து மின்னிணைப்பு பெறபட்டுள்ளமையும் சிறப்பிற்குரியதாகும். இது எமது கல்விப்பணியை சிறப்பாக முன்னெடுக்க ஏதுவாக அமையும் என நம்புகிறேன். அது மட்டு மன்றி இங்கு காணப்படுகின்ற தகுதிவாய்ந்த ஆசிரியர்களதும் எள் என்றால் எண்ணெயாக நிற்கும் பெற்றோரது அபரிமிதமான பங்களிப்பு காணப்படுவதால் கணனி சம்பந்தமான வசதிகள் கிடைக் குமிடத்து எமது பாடசாலை ஒரு வருட காலத்திற்குள் ஒரு கணிச மானளவு முன்னேற்றத்தைக் காணும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளது என அதிபர் தெரிவித்துள்ளார்.





வாணிவிழா நிகழ்வு



விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்வு





கால்கோள் விழா

# போஷாக்கு குறைபாட்டை நீக்க நிவாரணம் வழங்கும் நடவடிக்கை

## உதயன் எம்.பி. ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் நிலவும் போஷாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் போஷாக்கு தேவையுடைய மக்களுக்கு நிவாரணம் வழங்க ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரும் தீவக ஒருங்கிணைப்புக்குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் உதயன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் உதயனால் தீவக சிறார்களின் உடல் திணிவு நிறைச்சுட்டி (BMI) குறைவாக உள்ளமை, கர்ப்பிணித்தாய்மார்களிற்கு போதியளவு போஷாக்கு உணவு கிடைக்காமை மற்றும் குடும்பங்களின் வாழ்வாதார மட்டம் குறைவாகவுள்ளமை போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு முன்வைக்கப்பட்ட கோரிக்கையினையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்படி நிவாரணம் வழங்குவதற்கு உரிய வழி வகுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர் ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் மேற படித்திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டதில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தங்கிவாழ்வோர், எண்ணிக்கை அதிகமாகவுள்ள குடும்பங்கள், மாற்றுவலுவுடையோர் உள்ளகுடும்பங்கள், மிக வறிய நிலையில் உள்ள குடும்பங்கள் போன்றவற்றிறகு முன்னுரிமை அடிப்படையில் மேற்படி திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

# அட்டகாசம் புரிந்த யானை வவுனியாவில் உயிரிழந்தது



கடந்த நான்கு நாட்களாக வவுனியா. ஈச்சங்குளம் கருவேப்பங்குளம் பகுதியில் குடிமனைக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்த காட்டு யானை நேற்று முன் தினம் அதிகாலை இறந்துள்ளது

மேற்படி கிராமத்தில் யானை புகுந்து அங்குள்ள மக்களை அச்சுறுத்தி வந்ததுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சந்தனம் முத்துராஜா (வயது -42) என்பவரைத்தாக்கிய நிலையில் அவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் இந்த யானை ஈச்சங்குளம் குளக்கரைப் பகுதியில் நடமாட முடியாதபடி காணப்பட்ட நிலையில் அப்பகுதி மக்களால் வன இலாகா அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

இந்த யானை நோய்வாய்ப் பட்டுள்ளதாக வன இலாகா அதிகாரிகள் தெரிவித்திருந்த நிலையில் மிருக வைத்திய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் சுமார் 10 வயது மதிக்கத்தக்க அந்த யானையே குளத்தின அலைகரைப்பகுதியில் இறந்த நிலையில் காணப்பட்டது. (70)

## வெள்ளி நற்சிந்தனை...



# எதற்கு மாளிகை

தேவராஜனான இந்திரன் ஒருதடவை தேவ சிற்பியான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டு பதினான்கு உலகங்களிலும் சிறந்த மாளிகை கிடையாது என்று சொல்லும் படி அத்தனை பெரியதும் அத்தனை அழகியதுமான மாளிகை ஒன்றைக் கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டான்.

விஸ்வகர்மா தனது உதவியாட்களை வைத்துக் கொண்டு மிகப்பெரிய மாளிகையைக் கட்ட ஆரம்பித்தான் மிகப்பெரிய மாளிகையாகவும் மிக அழகியமாளிகையாகவும் இருக்க வேண்டும் என்று இந்திரன் விரும்பியதனால் பல தேவ வருடங்கள் ஆகியும்மாளிகையைக் கட்டி முடிக்க முடியவில்லை ஆதலால் விஸ்வகர்மாவும் உதவியாளர்களும் களைத்துப் போய் விட்டார்கள்.

இந்திரனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்ன் செய்யலாம் என்று அவன் திகைத்திருந்த போது இங்கே நாரத மாமுனிவர் வந்து சேர்ந்தார். இந்திரன், நாரதருக்கு மாளிகையைச் சுற்றிக்காட்டிவிட்டு "நீங்கள் பதினான்கு உலகங்களிலும் சஞ்சாரம் செய்கிறீர்கள் இத்தனை பெரிய மாளிகையை எங்காவது கண்டதுண்டா? என்று கேட்டான்.

அதற்கு நாரதர் நான் பார்த்ததில்லை. ஆனால அதோ வருகிறாரே மகரிஷி லோமசர் சிரஞ்சீவி, அவர் பார்த்திருக்கிறாரோ? என்னவோ" அவரிடம் கேட்கலாம் என்றான். மகரிஷிலோமசருக்கு உடம்பெல்லாம் ரோமங்கள் இருந்ததனால் லோமசர் என்று பெயர். இடுப்பில் கொபீனம், தலையில் சின்னப்பாய் அவ்வளவு தான் அவருடைய உடமையாகும்.

இந்திரன் அவரைப் பார்த்து "எதற காகப் பாயைத் தலைமேல் விரித்தாற்போல வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு லோமசர், "இந்த உடலோ அநித்தியம் இந்த அநித்தியமான உடலைக் காப்பதற்காக அதற்கென்று ஒரு வீடு கட்டிக் கொள்வானேன்? இந்த உடலைக் வெப்பத்திலிருந்தும் மழையிலிருந் தும் காப்பாற்ற இந்தச் சின்னப்பாய போதாதா? என்று கேட்டார்.

இந்தப் பதில் இந்திரனை ஆச்சரியப்பட வைத்தது, "சிரஞ்சீவியாகிய தாங்களா தங்கள உடலை அநித்தியம் என்றீர்கள்?

"சிரஞ்சீவியாக இருந்தாலும் என் உடலும் ஒருநாள் போக வேண்டியதுதான். என் உடலிலுள்ள அத்தனை உரோமங்களும் உதிர்ந்ததும் இந்த உடல் அழிந்துவிடும் இதோ பார். என் மார்புப்பாகத்தை இங்கிருந்த உரோமங்கள் உதிர்ந்து விட்டன பிரம்மா மறையும் போது எனது உடலிருந்து ஓர் உரோமம் கீழே உதிர்கிறது இந்த அற்பகாலத்திற்காவா என்னைச் சிரமப்பட்டு வீடு கட்டிக் கொள்ளச் சொல்கிறாய்? என்று கேட்டார்.

மகிரிஷி லோமசரின் ஆயுட்காலத்தோடு ஒப்பிடும்போது தன் ஆயுட்காலம் எவ்வளவு சிறியது என்பதை இந்திரன் எண்ணிப் பார்த்தான் உடனே அந்தப் பெரிய மாளிகையின் வேலையை நிறுத்தும் படி கட்டளையிட்டான்.

இந்திரனுக்கு இந்த நிலையுள்ள போது மானிடர்களாகிய நாம் கனவில் மாளிகை கட்டிக் கொள்கிறோம் அநித்தியங்களை நினைக்காமல் நித்தியங்களைத் தேடுங்கள்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

இந்த அரசாங்கத்தைக் கொண்டு பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்று தான் நினைத்த எதையும் அமெரிக்காவினாலோ, சர்வதேச சமூகத்தினாலோ சாதிக்க முடியவில்லை. இதற்கு மேல், பொருளாதாரத் தடை உள்ளிட்ட வழிமுறைகளின் மூலம், இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்கு சர்வதேச சூழமைவுகள் அவ்வளவாக இடம்கொடுக்கவும் மாட்டாது. அவ்வாறு செய்வதானாலும் கூட, அதை அமெரிக்காவும் மேற்குலகும் மட்டும் தன்னிச்சையாக மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

எனவே, தமக்கு வசதியான ஆட்சி ஒன்றை இலங்கையில் நிறுவுவதன் மூலம் அடைய நினைத்த இலக்குகளை அடையலாம் என்று அமெரிக்கா சிந்தித்தால் அது ஆச்சரியமானதாக இருக்க முடியாது. – ஹரிகரன்

இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது திருத்தச்சட்டம் அமையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக கூறிவிட்டது. நாடாளுமன்றத்திலும் சம்பந்தன் விளக்கமளித்துள்ளார். இந்த நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை பிரேரணையில் உள்ளடக்கி அதனை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தும் திட்டம் யாருடையது? யாரிடம் அதுபற்றிய ஆலோசனையை இந்தியா பெற்றுக்கொண்டது? என்ற கேள்விகள் எழுகின்றன. அப்படியானால் மறைமுகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்க வேண்டும். பிரேரணையில் கடும் வாசகங்கள் இல்லை என தமிழ்த்தரப்பு கவலை வெளியிட்டுள்ள நிலையில், பிரேரணையை விமர்சிக்க வேண்டாம் என சுமந்திரன் ஜெனிவாவில் வைத்து தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆகவே 13 ஆவது திருத்தச்சட்டம் பிரேரணையில் உள்ளடங்கப் போகின்றது என்பதை சுமந்திரன் அறிந்திருக்க வேண்டும் என்பதுடன் அதுதான் இனப்பிரச்சினைக்கும் தீர்வு என்பதை அவர் ஏற்றிருக்கின்றார் என்றும் தெரிகிறது. – அ. நிக்ஸன்

தமிழர்கள் ஒருகாலம் இந்தியாவைத் தாயகம் என்றும் இந்திரா காந்தியைத் தாய் என்றும் நம்பிக் காத்திருந்தார்கள். இப்பொழுது ஜெனீவாவை நம்பிக் காத்திருக்கிறார்கள். இங்கு பிரச்சினை வெளியாரை நம்புவதுதான். ஆனால், தமிழர்கள் எவ்வளவுக்கெவ்வளவு வெளியாரை நம்புகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு எல்லா வெளித்தரப்புகளும் தமிழர்களின் தலையைத்தான் உருட்டி விளையாட முற்படுகின்றன. ஏனெனில், அவர்களுக்கு அவர்களுடைய புவிசார் அரசியல் நலன்களே முக்கியம்.

ஜெனிவா எனப்படுவது அதன் முதலாவது பொருளில் ஒரு நீதிமான்களின் மன்றம் அல்ல. அங்கே நீதியை விடவும் புவிசார் அரசியல் நலன்களே முக்கியம். மேற்கு மற்றும் இந்தியக் கூட்டின் தென்னாசியப் பிராந்தியத்துக்கான வியூகம் ஒன்றில் தமிழர்களை அவர்கள் கருவிகளாகக் கையாண்டு வருகிறார்கள் என்பதே சரி. – நிலாந்தன்

வடக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 80 சதவிகிதம் அளவிலான வாக்குகளைப் பெற்றமையினால், எதிர்க்கட்சி ஒன்று இல்லாத நிர்வாகம் ஒன்று போன்று மாற்றமடைந்துள்ளது. அடுத்த தேர்தலிலும் அறுதிப் பெரும்பான்மை கிடைத்துவிடும் என்பது போன்ற சூழ்நிலையே காணப்படுவதனால் மக்கள் நலன் என்ற அடிப்படையில் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லாமற் போயுள்ளது. வடமாகாணத்தில் மட்டும் அல்ல, எந்த ஒரு அரசியற் சூழ்நிலையிலும் அடுத்த தேர்தலின் முடிவு எப்படி இருக்குமோ என்ற அச்சம் இல்லாத போது அசமந்தமாக இருப்பது இலகுவானதாக மாறிவிடும். தென்னிலங்கையிலும் இன்று அதுவே இடம்பெறுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி முக்கியமான ஒரு தேர்தலில் வெற்றி பெறும்வரை அரசாங்கத்தின் கவனத்தை திருப்புவது சாத்தியமானது அல்ல. வடக்கு மகாண முதலமைச்சராக விக்னேஸ்வரன் பதவி ஏற்றதன் பின்னர் வரவேற்பு வைபவங்களிலும், திறப்பு விழாக்களில் கலந்து கொள்வதற்கும் புறம்பாக, நிச்சயமான அரசியல் நடவடிக்கைகள் எதிலும் அவர் ஈடுபடவில்லை என்பது முக்கியமான ஒரு விடயம் ஆகும். உறுதியான எதிர்க்கட்சி ஒன்று இருக்கின்றபோதுதான் இவ்விதமான அசமந்தப் போக்கு இருப்பதற்கான சாத்தியம் குறைவானதாக இருக்கும். – பேராசிரியர் எஸ்.ஐ.கீதபொன்கலன்

சில வாரங்கள் முன்பு வடபுல மீனவர்களின் பிரச்சினைகளை முன்னிறுத்தி யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் நடக்கவிருந்தது. ஆனால், அதைத் தனது அரசியல் லாபத்திற்குப் பயன்படுத்த விரும்பிய ஒரு தமிழ்த் தேசியவாத அமைப்பு, இறுதி நேரத்தில் மீனவர் பிரச்சினைகளை ஒதுக்கித் தனது குறுகிய தமிழ்த் தேசிய நோக்கிலான கோஷங்களை முன்வைக்க முயன்றதால், அப்போராட்டத்திலிருந்து ஏகப் பெரும்பாலான மீனவர் சங்கங்கள் ஒதுங்கின. அதன் விளைவாக மீனவர் நலனை முன்னிறுத்துவதற்கான ஒரு பயனுள்ள போராட்டம் முடங்கியதுடன் குறுகிய தமிழ்த் தேசியவாதிகளும் மீனவரிடையே தமது நம்பகத்தை இழந்தனர். பாடம்! பொது நோக்கத்துடன் குறுகிய அரசியல் லாபம் இணைவது கேடு. – கோகர்ணன்

## மனைவியின் கையை முறித்த கணவனுக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரி பகுதியில் மனைவியை தாக்கியதாகக் கூறப்படும் கணவனை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டார்.

சந்தேக நபரை நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய போதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மனைவியின் கையை அடித்து முறித்ததாகக் கூறப்படும கணவனை பூநகரி பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்தனர்.

இதேவேளை, தாக்குதலுக்குள்ளான மனைவி பூநகரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## இறுவட்டுக்கள் விற்பனை இருவருக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் ஆபாசப்பட இறுவட்டுக்களை விற்பனை செய்த இருவருக்கு தலா 5000 ரூபா தண்டம் விதித்து யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

ஆபாசப் பட இறுவட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாக யாழ் மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலினையடுத்து, யாழ். நாவலர் வீதி மற்றும் கன்னாதிட்டி சந்தி ஆகியவற்றில் அமைந்துள்ள இரு இறுவட்டு விற்பனை நிலையங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சோதனையிடப்பட்டன.

இதன்போது விற்பனை நிலையத்திலிருந்த 20 ஆபாசப் பட இறுவட்டுக்கள் கைப்பற்றப் பட்டதுடன், குறித்த விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

தொடர்ந்து மேற்படி நபர்கள் இருவரையும் யாழ்.நீதவான் ந்திமன்ற நீதவான் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர்ப்படுத்திய போது, நீதவான் குறித்த நபர்களுக்கு தலா 5000 ரூபா தண்டமும், 6 மாதங்களுக்கு ஒத்திவைத்த சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (25)

# வவுனியா கலாசார மண்டபத்தில் மாத இறுதியில் "இயல் விழா 2014"

### கலை இலக்கிய ஆர்வத்தை உயர்த்த திட்டம்

இளம் கலை,இலக்கிய ஆர்வலர்களின் ஒன்றிணைவில் கடந்த வருட நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டு, வவுனியா மாவட்டத்தில் கலை இலக்கிய ரீதியிலான பணிகளைச் சிறப்பாக செய்து வருகின்ற, தமிழ் மாமன்றம், தனது முதலாவது பொது விழவான "இயல் விழா 2014" ஐ- எதிர்வரும் 30ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை, வவுனியா கலாசார மண்டபத்தில் வெகு சிறப்பாக நடாத்தவுள்ளது.




தமிழ் மாமன்றம் பெருமையுடன் நடாத்தும் இயல் விழாவில், அகில இலங்கை கம்பன் கழகத்தினுடைய ஸ்தாபகர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்பு விருந்தினராக பங்கேற்கவுள்ளார்.

இந் நிகழ்வு காலை, மாலை எனும் இரு அமர்வுகளாக நடாத்தப்படவுள்ளன. காலை 9.00 தொடக்கம் மதியம் 12.30 வரை காலை அமர்வும், மாலை 4.30 தொடக்கம் இரவு 8.30 வரை மாலை அமர்வும் இடம்பெறவுள்ளது.

காலை அமர்வில், பாடசாலை மாணவர்கள் பங்கேற்று விவாதம் புரியும் விவாத அரங்கும், தமிழ் மாமன்ற உறுப்பினர்கள் பங்குபெறும், சுழலும் சொற்போரும் இடம்பெறவுள்ளது. விவாத அரங்கிற்கு தமிழாசிரியர் என்.கே.கஜரூபன் சுழலும் சொற்போருக்கு கலாநிதி சிறி.பிரசாந்தன் அவர்களும் தலைமையேற்று சிறப்பிக்கவுள்ளனர்.

மாலை 4.30 தொடக்கம் இரவு 8.30 வரை இடம்பெறவுள்ள, மாலை அமர்வில், கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில், சிறப்பு பேச்சாளர்கள் பங்கு பெறும், பட்டி மன்றமும், தமிழ் மாமன்ற உறுப்பினர்கள் பங்கு பெறும் கவியரங்கும் இடம் பெறவுள்ளது.

குறைந்து செல்லும் தமிழார்வத்தை, மீண்டும் துலங்க வைத்து, வவுனியா மாவட்டத்தினுடைய, கலை இலக்கிய ரசனையும், இளம் சமுதாயத்தினுடைய கலை இலக்கிய ஆர்வத்தையும் பெரிதும் உயர்த்திச் செல்ல, இவ விழா கால்கோளாக அமையும் என்பதில் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தரமான நிகழ்வுகளால் நிறையவுள்ள, தமிழ் மாமன்றத்தினுடைய இயல் விழாவில், கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து, பயன் பெறுமாறு, தமிழ் மாமன்றம் அன்புடன் அழைக்கின்றது.

## கசிப்பு உற்பத்திக்கு உபகரணங்கள் வைத்திருந்தவருக்கு தண்டம் விதிப்பு



கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள், கோடாக்கள வைத்திருந்தமை மற்றும் மன்றில் சுற்றவாளியெனப பொய் கூறியமை ஆகிய குற்றங்களுக்காக கிளிநொச்சி திருவையாறு பகுதியினைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 2,25,000 ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வாகப்தீன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இது பற்றித் தெரியவருவதாவது,

கிளிநொச்சி திருவையாறு பகுதியினைச் சேர்ந்த நபர் ஒருவர் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் மற்றும் 46 போத்தல் கோடாக்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சி பொலிஸாரால் கடந்த 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து, கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் மேற்படி நபரை ஆஜர்ப்படுத்திய வேளை, மன்றில் தான் சுற்றவாளியென சட்டத்தரணி மூலம் தெரிவித்திருந்த நிலையில் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

மேற்படி வழக்கு தவணை முறையில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், மீண்டும் நேற்று முன்தினம் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த நபர் குற்றவாளியென நீதவானால் அடையாளங் காணப்பட்டார்.

இதனையடுத்து சுற்றவாளியென பொய்கூறியமை மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்திற்காக 1,25,000 ரூபாவும், 46 போத்தல் கோடாக்கள் வைத்திருந்த குற்றத்திற்காக 1,00,000 ரூபாவும் தண்டம் விதித்ததுடன், இவற்றினைச் செலுத்தத் தவறின் 18 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டார்.

### குறைநிறைகளைத் தெரிவிக்க

## வவுனியா வைத்தியசாலையில் 12 அபிப்பிராயப் பெட்டிகள்

வவுனியா பொது வைத்தியசாலையின் குறைநிறைகளை நோயாளர்கள் அறிவிப்பதற்காக 12 அபிப்பிராய பெட்டிகளை பொருத்தியுள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா வைத்தியசாலையின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் நோயாளர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படவுள்ளன.

நோயாளர்களிடம் அபிப்பிராயங்களை கேட்பதனூடாக வைத்திய சேவையை மேலும் முன்னோக்கி நகர்த்த முடியுமெனக் கருதப்பட்டதால் வைத்தியசாலையில் அபிப்பிராயப் பெட்டிகளை பொருத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.




எனவே, பொதுமக்கள் மற்றும் நோயாளர்கள் வைத்தியசாலையில தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்டவை தொடர்பில் கருத்துக்களை இப் பெட்டிகளினுள் இடமுடியுமெனவும் அவர் கூறினார்.

இப்பெட்டிகளினுள் இடப்படும் கருத்துக்களும் உடனடியாக கவனத்திற்கொள்ளப்படுமெனவும் மேலும் கூறினார். (70)

## பொதுநூலக கேட்போர் கூடத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு அபிவிருத்திக்குழு கூட்டம யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இதில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கலந்துகொண்டு சிவில் பாதுகாப்பு மேம்படுத்தல் தொடர்பாக விளக்கமளித்தார்.

இதன்போது, வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் "வடமாகாணத்தில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்கள், கையூட்டு, பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை எவ்வாறு கட்டுப்படுத்துதல் தொடர்பான கருத்துரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபிணி வரதலிங்கம், யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸ், மதகுருமார், காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (25)

## நட்டான்கண்டல் சித்தி விநாயகரின் நிர்மாணப் பணிகளுக்கு கிடைத்தது நிதி

### பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட நட்டான்கண்டல் கிராமத்தில் சிறி சித்திவிநாயகர் ஆலய நிர்மாணப்பணிகளுக்கென ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவர் தயாநந்தன் தெரிவித்தார்.

குறித்த ஆலய நிர்மாணத்திற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வைபவரீதியாக இடம்பெற்றதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"குறித்த பிரதேசத்தில் உள்ள கோயில் ஒன்றை அமைத்து தருமாறு பிரதேச மக்கள் என்னிடம் விடுத்த வேண்டுகோளுக் கிணங்க கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன், மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாருக் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்தேன்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும் இணைந்து ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாவினை பெற்றுக்கொடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த ஆலயத்தின் நிர்மாணப்பணிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தனது நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்கித் தருவதாகவும் வாக்குறுதியளித்துள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## பனை ஓலை வீழ்ந்து இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏழாலை வடக்கு பகுதியில் பனை மரத்திலிருந்து பனை ஓலை விழுந்ததில் மகாதேவன் விஜிதரன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்த அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை பனை மரத்தில் பனை ஓலைகள் வெட்டப்படுவதை கீழே நின்று பார்த்துக்கொண்டிருந்தபோதே இவரின் மீது பனைஓலை வீழ்ந்தது.

இதனால் இவரின் தலை மற்றும் முகத்தில் கீறல் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

# தரம் 10 மாணவர்களுக்கான முதலாம் தவணை பயிற்சிப் பரீட்சை - 2014

## வரலாறு

### பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1) 'நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இறந்த காலத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும்' எனக் கூறியவர் யார்?
1) G.M.திரவிலியன் 2) E.H.R.கார்
3) ஹெரடோறஸ் 4) ஜவஹர்லால் நேரு

2) அசோக மன்னனின் முடிசூட்டு விழாவானது புத்த பெருமான் பரிநிர்வாணம் அடைந்து 218 வருடங்களின் பின்னர் இடம்பெற்றது எனக் கூறும் நூல்கள்
1) சூளவம்சம், தீபவம்சம் 2) மகாபோதி வம்சம், மகாவம்சம்
3) மகாபோதி வம்சம், சூளவம்சம் 4) மகாவம்சம், தீபவம்சம்

3) ஒரு நாட்டின் வரலாற்றை தொடர்ச்சியான கால ஒழுங்கில் அறிவதற்கு உதவும் மூலாதாரம்
1) இலக்கியங்கள் 2) கல்வெட்டுக்கள்
3) சிதைவுகள் 4) நாணயங்கள்

4) பின்வருவனவற்றில் உரைநடை இலக்கியங்களை சரியாக எடுத்துக்காட்டும் தொகுதி எது?
1) அட்டுவா, நிகண்டு, உபதேசம், வைத்தியம்
2) மகாகாவியம், தூது, காவியம், சிகிரிகீதம், புகழ்கதை
3) நூல்கள், தேசசஞ்சாரிகையின் அறிக்கைகள், தேசப்படங்கள், நூல்குறிப்புக்கள்
4) பரம்பரைக் கதைகள், நாட்டார்பாடல், தர்மக் கவிதை, போர்க்கவிதை

5) வரலாற்றைக் கற்பதனால் எமக்குக் கிடைக்கும் பயன்களில் தவறானது பின்வருவனவற்றில் எது?
1) தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளலாம்
2) தர்க்க ரீதியான சிந்தனையை வளர்த்துக் கொள்ளலாம்
3) மாற்றுக் கருத்துக்களை வளர்த்துக் கொள்ளலாம்.
4) ஏனைய கலாசாரங்களை மதிக்கும் பண்பை வளர்க்கலாம்.

**பின்வரும் இலக்கியங்களைக் கொண்டு 6, 7, 8 ஆம் வினாக்களுக்கு விடை அளிக்குக.**

A - தீபவம்சம் B - மகாவம்சம்
C - சசதாவத D - இண்டிக்கா
E - பாரசீக யுத்தம் F - தர்மபிரதீபிகாவ

6) இலங்கை வரலாற்றை அறிய உதவும் பிரதானமான இலக்கியம் எது?
1) A 2) B 3) C 4) D

7) பொலநறுவைக் காலத்துக்குரிய நூல்கள் எவை?
1) B,F 2) D,E 3) A,B 4) C,F

8) வெளிநாட்டு இலக்கியங்களாகக் காணப்படுவது
1) A,D 2) D,E 3) C,F 4) A,C

9) குகைகளின் கற்பீலிக்கு மேல் பிராமிய எழுத்துக்களில் பொறிக்கப்படும் கல்வெட்டுக்களை எவ்வாறு அழைப்பர்.
1) குகைக்கல்வெட்டு 2) குன்றுக் கல்வெட்டு
3) சுவர்க்கல்வெட்டு 4) தூண்கல்வெட்டு

10) நிரல் X உடன் நிரல் Y இனைத் தொடர்புபடுத்துக.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1) அர்த்த சாஸ்திரம் | A - கல்கனர் |
| 2) பாரசிக யுத்தம் | B - அரிஸ்ரோட்டில் |
| 3) இராஜதரங்கனி | C - கௌடில்யர் |
| 4) டிமுண்டோ | D - புறோகோபியபஸ் |

1) C, B, A,D 2) C,A, B,D
3) C,D, A,B 4) B, C,A, D

11) துட்டகைமுனு மன்னனின் படைத்தளபதிகள் 10 பேர் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விபரங்களை வெளிப்படுத்தும் கல்வெட்டுக்கள்
1) சிதுள்பவ்வ, சங்கபால விகாரைக் கல்வெட்டுக்கள்
2) மிகிந்தலை, தோணிகல கல்வெட்டுக்கள்
3) சிதுள்பவ்வ, றிட்டிகல கல்வெட்டுக்கள்
4) வெஸ்சகிரியா, சங்ககால விகாரைக் கல்வெட்டுக்கள்

12) இருக்கு வேதத்திற்கு அமைய ஆரியர்கள் ஆரம்பத்தில் இந்தியாவில் குடியேறிய பிரதேசம்
1) டில்லி 2) டெக்கான் சமவெளி
3) சப்த சிந்து 4) ஸ்டெப்ஸ் புல்வெளி

13) ஆரியரின் நிர்வாக முறையில் கிராம மக்கள் செலுத்த வேண்டிய வரியைச் சேகரிக்கும் பொறுப்பு உடையவர்.
1) ராஜன் 2) சேனாதிபதி 3) புரோகிதர் 4) காமினி

14) 16 அரசுகளின் நிர்வாக முறையில் குடியாட்சி நிலவிய அரசுகள்
1) மகதம், அங்கம் 2) வஜ்ஜி, மல்ல
3) கோசலை, அவந்தி 4) மத்சய, வஜ்ஜி

15) பிம்பிசாரன் காலத்தில் மகதத்தின் தலைநகர் காணப்பட்ட நகரம்
1) பாடலிபுரம் 2) ராஜஹக
3) டில்லி 4) பஞ்சாப்

16) மகதப் பேரரசை ஆட்சி செய்த இறுதி அரச வம்சம்
1) கரியங்க வம்சம் 2) மௌரிய வம்சம்
3) நந்த வம்சம் 4) சிசுநாக வம்சம்

17) மகதத்தினை மௌரிய வம்ச ரீதியில் ஆட்சி செய்த முதல் ஆட்சியாளன் யார்?
1) பிம்பிசாரன் 2) பிந்துசாரன்
3) சந்திரகுப்தன் 4) அசோகன்

18) "நாட்டு மக்கள் அனைவரும் எனது பிள்ளைகள்" என்ற கூற்றுடன் தொடர்புடைய மௌரியப் பேரரசன்
1) அசோகன் 2) பிந்துசாரன்
3) சந்திரகுப்தன் 4) தனநந்தன்

19)
- கவிஞனாகவும் இசைக்கலைஞனாகவும் விளங்குதல்
- பிராமணர்களுக்கு பசுக்களைத் தானம் வழங்குதல்
- அஸ்வமேத யாகம் நிகழ்த்துதல்

மேற்கூறப்பட்ட நிகழ்வுகளுடன் தொடர்புடைய குப்தப் பேரரன் பின்வருவனவற்றுள் யார்?
1) சமுத்திரகுப்தன் 2) 1 ஆம் சந்திரகுப்தன்
3) குமாரகுப்தன் 4) ஸ்கந்தகுப்தன்

20) கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த தொலமி தனது நூலில் இலங்கையை எப்பெயரால் குறிப்பிடுகின்றார்?
1) செரண்டிப் 2) தப்ரபேன்
3) பாரசமுத்திரம் 4) தாமரபரணி

21) கி.பி 8 ஆம் நூற்றாண்டின் பின்னர் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள்
1) அரசர்களை வர்ணிப்பதாக உள்ளது.
2) மகாயான பௌத்தத்தை வர்ணிப்பதாக உள்ளது.
3) கிராமத் தலைவர்களைப் பற்றிக்கூறுகிறது.
4) பண்டைய வர்த்தகத்தைப் பற்றிக் கூறுகிறது.

22) வர்த்தக சந்தையொன்றின் நிர்வாகம் பற்றிய விடயங்களை வெளிப்படுத்தும் கல்வெட்டு
1) வல்லிபுர பொற்சாசனம் 2) பதுளை தூண்கல்வெட்டு
3) கொடவாய தூண்கல்வெட்டு 4) பனாகடுவ செப்பு சாசனம்

23) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் தொடர்பான தகவல்கள் அதிகம் கிடைத்துள்ள மாவட்டம்
1) அம்பாந்தோட்டை மாவட்டம் 2) இரத்தினபுரி மாவட்டம்
3) சப்பிரகமுவ மாவட்டம். 4) களுத்துறை மாவட்டம்

24) மகாவம்சத்தின்படி விஜயன் குழுவினர் இலங்கையில் வந்திறங்கிய பிரதேசம்
1) மகாதித்த 2) கோகர்ண
3) ஜம்புகோளப் பட்டிணம் 4) தம்பபன்னி

25) கதம்ப நதி, கம்பீரநதி, கோணநதி என்பவற்றில் குடியிருப்புக்களை நிறுவிய ஆரியக் குழுக்கள்.
1) விஜயன் குழுவினர் 2) பத்தகச்சான குழுவினர்
3) பண்டுவாசுதேவன் குழுவினர் 4) மதுராபுரி இளவரசி குழுவினர்

26) அனுராதபுரத்தை இலங்கையின் முதற் தலைநகராக நிறுவிய முதல் மன்னன்
1) விஜயன் 2) பண்டுவாசுதேவன்
3) பண்டுகாபயன் 4) வசபன்

27)
- மகிந்ததேரர் குழுவினர் வருகை
- புத்தசாசனம் அமைத்தல்
- புனித வெள்ளரசு மரம் நாட்டுதல்

மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் இடம்பெறும் காலத்தில் அனுராதபு ஆட்சியாளனாக இருந்தவர் யார்?
1) பண்டுகாபயன் 2) மகாசேனன்
3) தேவநம்பியதீசன் 4) மூத்தசிவன்

28) எல்லாளரைத் தோற்கடித்து உருகுணையும் அனுராதபுரத்தையும் ஒன்றிணைத்துக் கொண்டு முழு நாட்டையும் ஆட்சி செய்த மன்னன்.
1) துட்டகைமுனு 2) வட்டகாமினி
3) மிரிசுவெட்டி 4) தூபராம

29) வலகம்பாகு மன்னனால் அமைக்கப்பட்ட தாதுகோபம் எது?
1) அபயகிரி 2) ரூவான்வெலிதாபக
3) மிரிசுவெட்டி 4) தூபராம

30) இலம்ப கர்ண வம்சத்தின் முதல் மன்னன் யார்?
1) தேவநம்பியதீசன் 2) வசபன்
3) வட்டகாமினி 4) மகாசேனன்

### பகுதி II


**முதலாம் வினா உட்பட எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01) (அ) பகுதி I இல் உள்ள வரலாற்று இடங்களை இலங்கைப் புறவுருவப் படத்திலும் பகுதி II இல் உள்ள வரலாற்று இடங்களை உலகப் புறவுருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i) ஜம்புகோளப்பட்டிணம், தம்பபன்னி, கோகர்ண, தீகவாவி, மகாகம, மகாவலிகங்கை, மல்வத்து ஓயா, ஆனையிறவு, கல்யாணி, கலாஓயா

ii) செங்கடல், கஸ்பியன் கடல், கைபர் கணவாய், பாடலிபுரம், தாமரலிப்தி, கங்கை நதி, இமயமலை, சிந்து நதி, காவேரி ஆறு, டில்லி

ஆ)



1) இக்கலைப்படைப்பு யாது?
2) இக்கலைப்படைப்பு எம் மன்னனால் உருவாக்கப்பட்டது?
3) இக்கலைப்படைப்பு எக் கலை மரபினை வெளிப்படுத்துகிறது?
4) இக்கலைப்படைப்பு அமைந்துள்ள நாடு எது?

**இ) மிகச் சுருக்கமான விடை தருக**

1) மிகச் சிறந்த அரசியல்வாதியாகப் போற்றப்படும் இந்தியாவின் முதல் பிரதமர் யார்?
2) புனித வெள்ளரசு மரத்தின் வரலாற்றைக் கூறும் நூல் எது?
3) அபயகிரி விகாரையில தங்கிச் சென்ற சீனப் பௌத்த பிக்கு யார்?
4) இலங்கையில் காணப்படும் சிதைவுகளில் மிகச் சிறந்தது எது?
5) பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட வெண்கல நடராஜர் சிலை எக்காலத்திற்குரியது?
6) "மகாராஜாதிராஜா" என்ற பட்டத்தினைப் பயன்படுத்திய ஆட்சியாளர்கள் யார்?
7) மேகதூதம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
8) 44 வருடங்கள் நீதிதவறாது அனுராதபுரத்தை ஆட்சி செய்த சோழ மன்னன் யார்?
9) "மின்னேரியாத் தெய்வம்" என அழைக்கப்பட்ட அனுராதபுர ஆட்சியாளன் யார்?
10) இராஜராஜசோழன் படையெடுத்த காலப்பகுதி யாது?

02)

1) வரலாறு தொடர்பில் கருத்துக்களை முன்வைத்த மூவரைக் குறிப்பிடுக.
2) வரலாற்று மூலாதாரங்களின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக?
3) வரலாற்றைக் கற்பதனால் கிடைக்கும் இரு பயன்களை சுருக்கமாக விளக்குக?
4) வரலாற்றில் கல்வெட்டுக்கள் பெறும் முக்கியத்தினை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக?

03)

1) ஆரியர்களின் இந்திய வருகையை உறுதிப்படுத்தும் மூன்று இலக்கியங்களைக் குறிப்பிடுக.
2) இந்தியாவில் குடியேறிய ஆரியர்களின் நிர்வாக அமைப்பு காணப்படும் நான்கு இயல்புகளைக் குறிப்பிடுக.
3) மகதத்தின் எழுச்சிக்கு தொடக்க ஆட்சியாளன் பிம்பிசாரன் மேற்கொண்ட இரு நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக?
4) மௌரியப் பேரரசின் வளர்ச்சிக்கு அசோகன் ஆற்றிய பணிகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக?

04)

1) குப்த ஆட்சியாளர்கள் மூவரைக் குறிப்பிடுக.
2) குப்த பேரரசின் சமூக நிலையில் காணப்பட்ட நான்கு வர்ணங்களையும் தருக.
3) குப்த பேரரசின் நிர்வாக முறையில் காணப்பட்ட இரு இயல்புகளை சுருக்கமாக விளக்குக.
4) குப்த பேரரசு காலம் இந்திய வரலாற்றில் பொற்காலமானது என்பதை கல்வி இலக்கியம் என்பவற்றைக் கொண்டு விளக்குக.

# 1 st Term Examination -2014 Grade - 7

**Test - 01**

**Match the words in column a with their meanings in column B**

| A | B |
|---|---|
| Assembly | friendship |
| Opportunity | gathering |
| Companionship | everyday |
| Concert | good chance |
| Daily | Musical entertainment |

**Test - 02**

**Complete the following sentences with the correct verbs given below.**

**Study , attend, start, return , go**

1) We --------------------- to school by bus.
2) We --------------------- a number of subjects in the class.
3) Everyday we --------------------- The morning assembly.
4) I --------------------- Home at 2.30 p.m
5) Most schools in Sri Lanka --------------------- At O'clock in the morning.

**Test -03**

**Put the apostrophes in the correct places.**

**Eg :** Theyre doctors
They're doctors.

1) Its Ravis bicycle
--------------------------------------------------------
2) Theyve just gone out.
--------------------------------------------------------
3) She cant run fast.
--------------------------------------------------------
4) They 11 meet you tomorrow.
--------------------------------------------------------
5) It was a boys school
--------------------------------------------------------

**Test - 04**

**Put suitable present participle as modifiers for the following nouns. Use the verb fiver below.**

**Wash, draw, close, drink, smile**

1) --------------------- sheets.
2) --------------------- date.
3) --------------------- water.
4) --------------------- Machine
5) --------------------- girl.

**Test -05**

**Put the following events in the correct columns.**

**Realy, Javelin, throw, sack rce, 100 meter race, long jump, hurdles, pole vault, shot - put, 200 meter race, discus, throw.**

| Track events | Field events |
|---|---|
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |

**Test -06**

**Put the suitable words for the following phrases use the words given in the box.**

1) A weapon used to cut and kill ------------------------------------------
2) A naughty boy ------------------------------------------
3) A bird's wings are made of this ------------------------------------------
4) The land you live in ------------------------------------------
5) Blood pumping organ ------------------------------------------

heart
brat
sword
feathers
country

**Test -07**

**Complete the agenda of the Hindu college select the words from the box.**

**Hindu College Prize day - 2014 Agenda**

| | | |
|---|---|---|
| 1) Lighting the | ------------------------------------------ | 0.9.00 a.m |
| 2) Welcome | ------------------------------------------ | 0.9.10 a.m |
| 3) Anuual | ------------------------------------------ | 0.9.30 a.m |
| 4) | ------------------------------------------ Address | 10.00 a.m |
| 5) Prize | ------------------------------------------ | 10.30 a.m |
| 6) Group | ------------------------------------------ | 11.00 a.m |
| 7) One act | ------------------------------------------ | 11.15 a.m |
| 8) Folk | ------------------------------------------ | 11.30 a.m |
| 9) | ------------------------------------------ of thanks | 11.45 a.m |
| 10) | ------------------------------------------ anthem | 12.15 a.m |

**Drama, School, Oil lamp, giving, dance, speech, vote, report, singing, chief guest's**

**Test -08**

**Complete these sentences choosing the correct from the box.**
**On may way to school.**

1) I hear babies ------------------------------ For milk
2) I see dust ------------------------------ in the air.
3) I small ------------------------ rice in the kitchen
4) I hear vehicles ------------------------ On the road.
5) I see animals ------------------------ in the field

screaming
floating
crying
grazing
boiling

**Test -09**

**Use the best adjectives to fill in the blanks.**

**Gold , best, famous, empty, young**

1) Disapomok was a ------------------------------ teacher
2) He had five hundred ------------------------------ men as students.
3) My daughter needs some ------------------------------ Jewelry.
4) Bodhisatta came back with ------------------------------ hands.
5) One who steals the ------------------------------ things will marry her.

# எரிபொருள் விநியோகத்திற்காக அரச வங்கிகளில் 631 மில்லியன் கடன்

## அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் எரிபொருள் விநியோகத்தை தங்கு தடையின்றி மேற்கொள்ளும் வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 631 மில்லியன் ரூபாய்களை அரசின் பிரதான வங்கிகள் இரண்டிடமிருந்து கடந்த 2011,2012 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் பெற்றுள்ளதாக அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெிவித்துள்ளார்.**



இலங்கைவங்கி,மக்கள்வங்கி மற்றும் இதற்கு மேலதிகமாக ஈரானின் தேசிய ஒயில் கம்பனி ஆகியவற்றிடமிருந்து இந்தக் கடன் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட பணத்திற்கு 35 மில்லியன் ரூபா வட்டியாகச் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையிலுள்ள லங்கா இந்தியன் எரிபொருள் நிறுவனம் இலாபமீட்டுவதைப் போல, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபமீட்ட முடியாதமைக்கான காரணம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசியல் மயப்படுத்தப்பட்டதே காரணமாகும் இது மக்களுக்கான மேலதிக சுமையாகும் எனவே இரண்டு அரச வங்கிகளிலுமே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தங்கியிருக்க வேண்டுமென ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா எம்.பி தெரிவித்துள்ளார்.

இதனிடையே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஒரு வருடமாக நஷ்டத்தில் இயங்குவதற்கு அரச போக்குவரத்து நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் எரிபொருளை வழங்குவதுடன்,இலங்கை மின்சாரசபைக்கு கடனடிப்படையிலும் குறைந்த விலையிலும் எரிபொருளை வழங்குவதே காரணமென பெற்றோலியத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன

# சுகாதாரத்துறையிலுள்ளவர்கள் பணத்தின் மீது அன்பானவர்கள்

## அமைச்சர் சிறிசேன கூறுகிறார்

(கொழும்பு)

சுகாதாரத் துறையில் பணியாற்று பவர்களில் பெருமளவானோர் பணத்தின் மீதே அதிக அன்பு செலுத்தவதாக சுகாதாரத் துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹிங்குராங் கொடவில் புதிய தனியார் வைத்தியசாலை யொன்றின் திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்க வைத்தியசாலைகளில பரசிற்றமோல் கொள்வனவிற்கு மட்டும் 40 தொடக்கம் 60 இலட்சம் ரூபாவினை அரசாங்கம் செலவு செய்கின்றது.

இவ்வாறு பரசிற்றமோலுக்கு செலவு செய்யப்படும் தொகை தேவைதானா என அரசாங்கம் விசாரணை நடாத்தியது எனினும் சில வைத்தியசாலைகளில் இலாபமீட்டும் சில பேர்வழிகள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனவே பணத்தின் மீது அன்பு செலுத்துபவர்களே சுகாதாரத்துறையில் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 2 நெற் களஞ்சியங்கள் கிளிநொச்சியில் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு புதிய நெல் களஞ்சிய சாலைகளை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த முறை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்பயிர்ச் செய்கையை கருத்தில் கொண்டே இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தற்போது அம்பாறை, மட்டக் களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அதிக நெல்உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டைனமேட் மீன்களை அழிக்குமாறு உத்தரவு

யாழ் உடுத்துறை கடற்பரப்பில் டைனமேட் வெடிகளைப் பயன்படுத்தி பிடித்த மீன்களை அழிக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உ.விஜயராணி உத்தரவிட்டார்.

இது தொடர்பில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்தபோதே, பதில் நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

உடுத்துறை கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை டைனமேட் வெடிகளை பயன்படுத்தி அப்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதை அறிந்த கடற்படையினர், அங்கு சென்றபோது, பிடித்த மீன்களை அவ்விடத்தில் போட்டுவிட்டு மீனவர்கள் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பில் யாழ் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளுக்கு தெரிவித்த கடற்படையினர், கைபற்றிய மீன்களையும் மேற்படி அதிகாரிகளிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (25)

# அமலனின் நண்பர்களுக்கு கைபேசியில் அச்சுறுத்தல்

ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணம் ஒருநாள் துடுப்பாட்ட போட்டியின் போது கொலை செய்யப்பட்ட ஜெயரட்ணம் தர்ஷன் அமலனின் (23) மரணம் தொடர்பில் சாட்சியமளித்த அவரது நண்பர்கள் இருவருக்கு தொலை பேசியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக யாழ் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அச்சுறுத்தலுக்கு உள்ளான அமலனின் இரு நண்பர்களுமே இந்த முறைப்பாட்டைச் செய்ததாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் அன்ரனி விமல்நாத் மற்றும் அவரது நண்பரான அமிர்தலிங்கம் துஷ்யந்தன் ஆகியோரின் தொலைபேசிகளுக்கே இந்த அச்சுறுத்தல் அழைப்புக்கள் வந்துள்ளன.

மேற்படி இருவரும் அமலனின் கொலை தொடர்பில் வட்டுக் கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த 15ஆம் திகதி வாக்கு மூலம் அளித்துள்ளனர் என பொலிஸார் கூறினர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணிக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ண ஒருநாள் துடுப்பாட்டப் போட்டி கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற போது, இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில், அமலன் கொல்லப்பட்டார்.

இது தொடர்பில் நால்வர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

# ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி

(வவுனியா)

வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி பயிற்சிப்பட்டறை நாளை வலயக கல்வி அலுவலக முதன்நிலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தெரிவித்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தலைமையில். நடைபெறவுள்ள இப்பயிற்சிப்பட்டறையில் கருத்துரைகளை கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா.மாணிக்கவாசகம், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறுமுகம் சுபாஸ்கரன், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி ந.க.கிரேனியர் உள்ளிட்ட பலர் ஆற்றவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இப்பயிற்சிப்பட்டறையில் சகல ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுளளார்.

# மோட்டார் சைக்கிளில் சென்ற மருத்துவ மாது வீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கணவருடன் மோட்டார் வைக்கிளில் இருந்து பயணித்த பெண்ணொருவர் தவறி விழ்ந்து படுகாயமடைந்து நேற்று முன்தினம் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை சந்தியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இவ்விபத்தில் தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடமையாற்றும் செந்தில்குமரன் ரஜனி (28) என்ற மருத்துவ மாதுவே படுகாயமடைந்தார்.

முதலில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.




யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்லூரி அதிபர் யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# மாயமான மலேஷிய விமானத்தின் இரண்டு பொருட்கள் கண்டுபிடிப்பு




மாயமாகியுள்ள மலேஷியன் எயார்லைன்ஸ் விமானத்தினது என்று சந்தேகிக்கப்படும் இரண்டு பொருட்கள், செயற்கைக் கோளின உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு பொருட்களுக்கும் மாயமான மலேசிய விமானத்திற்கும் தொடர்பு இருக்கலாம் என்று அவுஸ்ரேலிய பிரதமர் டொனி அப்போட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர், அவுஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் கூறுகையில்,

“மலேஷிய விமானம் மாயமாகி இரண்டு வாரங்கள் கழித்து புதியது மற்றும் நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளது. இரண்டு பொருட்கள் கிடைத்துள்ளன. அதற்கும் மாயமான விமானத்திற்கும் தொடர்பு இருக்கலாம்.

அவுஸ்ரேலிய விமானப் படையான ஆரியன் அந்த பொருடகளைப் பார்க்க 3 கண்காணிப்பு விமானங்களுடன் அனுப்பி வைககப்பட்டுள்ளது“ என்றார்.

இருப்பினும், இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இரு பொருட்களும் எவை? அவை எங்கு காணபபட்டன என்பதை அவுஸ்ரேலிய பிரதமர் தெரிவிக்கவில்லை.

இந்திய பெருங்கடலின் தெற்கு பகுதியில் விமானத்தை தேடும் பொறுப்பை அவுஸ்ரேலியா ஏற்றுள்ளது என்பது குறிப்பிடத்தககது.

இது குறித்து மலேஷிய பிரதமர் நஜீப் ரசாக் கூறுகையில்,

“விமானம் தொடர்பான தேடலுடன் தொடர்புடைய தகவல் செயற்கைக்கோள் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு கிடைத்துள்ளது.

விஞ்ஞானிகள் அந்த செயற்கைக்கோள் புகைப்படத்தை ஆய்வு செய்து விமானத் தேடலுடன் தொடர்புடைய பொருட்கள் இரண்டு காணப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் இதை வைத்து உடனே எந்தவொரு முடிவுக்கும் வர முடியாது என்று கூறியுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி 239 பயணிகளுடன் மலேஷியாவிலிருந்து சீனாவின் பீஜிங்கிற்கு புறப்பட்ட விமானம் காணாமற போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கணவரை விடுவிப்பதற்காக நிர்வாண போராட்டத்தில் மனைவி



அமெரிக்காவில் சிறையில் இருக்கும் கணவனை சந்திக்க நிர்வாண போராட்டம் நடத்திய பெண்ணின் செயல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் அர்லிங்டன் நகரில் உள்ள ரெஸ்டான் பகுதியைச் சேர்ந்த ஒருவரை சில தினங்களுக்கு முன்னர் பொலிசார் சிறையில் அடைத்தனர்.

இந்நபரின் மனைவி மவ்ரா புசெல், கணவரைப்பிரிந்த துயரத்தில் அளவுக்கு அதிமாக குடித்துவிட்டு போதையில் சிறைச்சாலையின் அருகே உள்ள மஜிஸ்திரேட் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளார்.

இதனையடுத்து தன் ஆடைகளை களைந்து தனது கணவரை விடுதலை செய்யுமாறு போராட்டம் நடத்திய அவரை வீடு திரும்புமாறு பொலிசர்ர் மிரட்டிய போதும் பிடிவாதமாக இருந்துள்ளார்.

இந்நிலையில் கணவருடன் தான் வீடு திரும்புவேன் என கடுமையாக அப்பெண் போராட்டம் நடத்தியதால், அன்று இரவு மட்டும் பெண்கள் சிறையிலடைக்கப்பட்ட அவர், மறுநாள் காலை தன் கணவருடன் விடுதலை செய்யப்பட்டார்.

உலகச் செய்திகள்

## இலங்கையில் சீனத்தலையீடு தவிர்க்க மொன்ரோ கோட்பாடு

### பாரதிய ஜனதா தெரிவிப்பு

இந்தியாவின் அனுமதி இன்றி, இலங்கையில் சீனா பிரவேசிக்க முடியாத வகையிலான வெளிநாட்டு கொள்கைகளை அமுலாக்கவிருப்பதாக, பாரதிய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஜஸ்வந்த் சின்ஹா இதனைத் தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகள் தென்னமெரிக்க நாடுகளின் விவகாரங்களில் தலையீடு செய்யாதிருக்க, அமெரிக்க மொன்ரோ கோட்பாட்டை அமுலாக்கி இருந்தது.

எதிர்வரும் லோக்சபா தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றிபெறுமாக இருந்தால், இவ்வாறான கோட்பாடு ஒன்றை அமுலாக்கவிருப்பதாக ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய் தலைமையில் இந்திய அரசாங்கம் 1998ஆம் ஆண்டு அணுகுண்டு சோதனை நடத்தி, சர்வதேச நாடுகளின் மத்தியில் தலைநிமிர்ந்தது.

ஆனால் தற்போது இந்தியாவின் கூற்றை எந்த நாடும் மதிப்பதில்லை.காங்கிரஸின் வெளியுறவு கொள்கையில் ஏற்பட்ட தோல்வியே இதற்கான காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பனங்காட்டு நரிக்கூட்டம் சலசலப்பிற்கு அஞ்சாது

### அன்பழகனுக்கு அழகிரி பதில்






அன்பழகனின் பூச்சாண்டிக்கெல்லாம் பயப்படமாட்டேன் என்றுமு.க.அழகரி கூறியுள்ளார். திமுக பொதுச்செயலாளர் அன்பழகன், நேற்று முன்தினம் அழகிரியுடன், கட்சியினர் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தார்.

இதற்கு பதிலளித்துள்ள மு.க.அழகிரி, என்னுடைய ஆதரவாளர்களும், தொண்டர்களும் பனங்காட்டு நரிக்கூட்டத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் யாருக்கும் பயப்பட மாட்டார்கள். பணத்திற்கும் ஆசைப்படமாட்டார்கள். பாசத்திற்கு கட்டுப்பட்டவர்கள். திமுகவில் அங்கம் வகிப்பவர்கள் பதவி ஆசைபிடித்தவர்கள். அவர்கள் தான் பணத்திற்காக எதுவும் செய்யக்கூடியவர்கள் என்றும் அவர்களின் பூச்சாண்டிக்கெல்லாம் நாங்கள் பயப்படமாட்டோம் எனவும் கூறியுள்ளார்.

## குஜராத் கலவரத்திற்கு மோடியே முழுப்பொறுப்பு

### சரத்பவார் குற்றச்சாட்டு



கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தையடுத்து 2002இல் குஜராத்தில் நடந்த கலவரத்துக்கான தார்மிகப் பொறுப்பிலிருந்து பாஜக பிரதமர் வேட்பாளரும் குஜராத் முதல்வருமான நரேந்திர மோடி தப்பிக்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார்.

சி.என்.என். ஐ.பி.என் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் மத்திய விவசாயத் துறை அமைச்சரான பவார் கூறியதாவது:

கலவர வழக்கிலிருந்து அகமதாபாத்தில் உள்ள நீதிமன்றம் ஒன்று விடுவித்ததால் மட்டுமே கலவரத்துக்கான தார்மிகப் பொறுப்பிலிருந்து மோடி தப்பிவிட முடியாது. இருப்பினும் வழக்கிலிருந்து மோடியை விடுவித்து நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நான் மதிக்கிறேன்.

நீதிமன்றம் சொல்வதை நாம் மதித்தாக வேண்டும். நான் அந்த மாநிலத்தின் முதல்வராக இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஏதாவது இதைப்போல (கலவரம்) அங்கு ஏற்பட்டால் நான் எனது பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது என்றார்.

குஜராத்தில் கலவரம் வெடித்ததற்கு மோடி தார்மிகப் பொறுப்பு ஏற்றாக வேண்டும் என கூறுகிறார்களா என்ற கேட்டதற்கு, நரேந்திர மோடி உட்பட எந்த முதல்வருக்கும் அதற்கான தார்மிகப் பொறுப்பு இருக்கிறது என்றார் பவார். வகுப்பு கலவர வழக்கிலிருந்து மோடியை நீதிமன்றம் விடுவித்துள்ளதால் அவரை இனி பொறுப்பாக்க முடியாது என ஏற்கனவே அவர் கூறியிருந்ததை சுட்டிக்காட்டி கேட்டபோது நீதிமன்ற தீர்ப்பை மதித்தாக வேண்டி இருக்கிறது என்று பதில் சொன்னார்.

## தொடர்ந்தும் கிரைமியா வசமாகும் உக்ரேன் கடற்படைத்தளங்கள்



வாக்கெடுப்பின் மூலம் தனி நாடாக தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொண்ட கிரைமியாவில் உக்ரைனுக்குச் சொந்தமான ஏராளமான இராணுவ நிலைகள் மற்றும் கடற்படைத் தளம் உள்ளது.

இவற்றை உக்ரைன் ராணுவ வீரர்கள் காவல் காத்து வருகின்றனர். சேவஸ்டோபோல் பகுதியில் கருங்கடலில் உள்ள உக்ரைன் நாட்டுக்கு சொந்தமான கடற்படைத்தளத்தை நேற்று முன்தினம் சுற்றி வளைத்த கிரைமியா படையினர், அந்த தளத்தை கைப்பற்றி அதில் ரஷ்ய நாட்டின் கொடியை ஏற்றி வைத்தனர்.

அந்த தளத்தின் கடற்படைத் தளபதி உள்ளிட்ட வீரர்களையும் வெளியேற்றி அவர்களை கைது செய்தனர். இந்த தாக்குதல் நிகழ்ந்த சில மணி நேரத்தில் தலைநகர் சிம்பெரோபோலில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பக்சிசரேய் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டின் மற்றொரு கடற்படைத் தளத்தையும் கிரைமியா படைகள் கைப்பறறின. எவ்வித தாக்குதலோ, எதிர் தாக்குதலோ இன்றி உக்ரைன் வீரர்கள் சரணடைந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செய்தி சேகரிக்க அப்பகுதிக்கு நிருபர்கள் சென்றபோது ரஷ்ய படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மிரட்டி, விரட்டியடித்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## பெண்ஊடகவியலாளர் வல்லுறவு கைதான நால்வர் குற்றவாளிகள்

### மும்பை நீதிமன்றம் அறிவிப்பு

கடந்த வருடம் இந்தியாவின் மும்பை நகரில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் பலரால் ஒரே நேரத்தில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு பேர் குற்றவாளிகள் என மும்பை செஷன்ஸ் நீதிமன்றம் நேற்று தீர்பபளித்துள்ளது.

இவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனை தொடர்பிலான வாதங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றே தண்டனைகளும் அறிவிக்கப்படலாம் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கில் ஐந்தாவதாக குற்றம் சாட்டப்பட்டவரின் வயது சம்பவம் நடைபெற்ற நேரத்தில் 18 வயதுக்குக் கீழ் என்று நம்பப்படுவதால் அவர் சிறப்பு சிறார் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் கைவிடப்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஒன்றை பணிக்காகப் படமெடுக்கச் சென்றிருந்தபோது 22 வயதுப் பெண் ஊடகவியலாளர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அந்நேரம் அப்பெண்ணோடு சென்றிருந்த உடன் வேலைபார்க்கும் ஆண் ஒருவர் கட்டிவைத்து தாக்கப்பட்டார்.

# பொன்னாலை கிராமத்திற்கு மின்சார விநியோகம் விரைவில்

## - வலி. மேற்கு எதிர்க்கட்சித் தலைவர் உறுதி -

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு மின்சார வசதியும், வீதி மீள்புனரமைப்பு வசதிகளும் முன்னெடுத்து வழங்கப்படும். அத்துடன் மின்சார வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நேற்று முன்தினம் பொன்னாலை மக்களை சந்தித்தபோது வலிகாமம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இணைப்பாளரும், வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தெரிவித்தார்.

மக்கள் பங்கேற்பு முன்மொழிவு திட்ட அபிவிருத்தி வேலைகள் வலி.மேற்கில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம்பெற்று வருகின்றன.

இதில் கலந்துகொண்ட சிவகுரு பாலகிருஸ்ணன் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலுள்ள 34 உள்ளூராட்சி சபைகளும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் · திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

யாழ். குடாநாட்டில் பல பிரதேச சபைகளில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் நடைபெறுகின்றது. எனவே வலி. மேற்கில் இதுவரை 10 இற்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விட்டன.

எதிர்காலத்தில் ஏனைய பல கிராமங்களில் இத்திட்டம் நடைபெறும்போது மக்கள் திரண்டு வந்து தங்கள் திட்டங்களை முன்மொழியுமாறும் உறுப்பினர் கேட்டுக்கொண்டதோடு, கல்விளான் மக்களின் எதிர்கால வீதி, மின்சாரம் உட்பட கல்வி வசதி குறித்து கேட்டுக்கொண்டார். (92)

# சர்வதேச் விசாரணை தேவை

## ஆஸி. செனட் உறுப்பினர் தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என அவுஸ்ரேலியாவின் நியூ சவூத் வேல்ஸ் மாநிலத்தின் செனட் உறுப்பினர் சாம் ஒஸ்டியார் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்படும் யோசனைக்கு அவுஸ்ரேலியா ஆதரவு வழங்க வேண்டும். போருக்கு பின்னர் சிறுபான்மை மதங்கள் மற்றும் ஊடகவியலாளர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

மனித உரிமை அமைப்புகள் உட்பட சர்வதேச அமைப்புகள் போர்க்குற்றங்களும், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களும் இடம்பெற்றுள்ளதாக கூறியுள்ளன. விடுதலைப் புலிகளின் சிறுவர்களை படையில் சேர்ந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள், காணாமற்போன சம்பவங்களுடன் இலங்கை அரசாங்க படையினர் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

# சத்தியாக்கிரகப் போராட்டம்

(மன்னார்)

பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து இன்று சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் மாவட்டப் பொது அமைப்புகள் ஆகியன இணைந்து அழைப்பு விடுத்துள்ளன. காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மன்னார் பொது விளையாட்டரங்கில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

# பொலிஸ் வீரர் தினம் யாழ். நகரில் இன்று

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் வீரர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. கடமையின்போது மரணமடைந்த பொலிஸாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்றைய தினம் பொலிஸ் வீரர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனையொட்டி இன்று காலை 8.00 மணிக்கு அஞ்சலி நிகழ்வொன்று யாழ். நூலக முன்றலில் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர கலந்துகொள்கின்றார்.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையும், அஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## அமைதியை...

பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணவேண்டும் என்ற முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, மீண்டும் மக்களை முழுமையான பதற்றத்துக்குள்ளாக்கி, நெருக்கடிகளுக்குள் தள்ளும் முயற்சிகளில் இந்தத் தீய சக்திகள் ஈடுபட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது.

இது மக்களுக்கு மீண்டும் அக, புற நெருக்கடிகளைக் கொடுக்கும் ஒரு நிலையையே தோற்றுவிக்கும். பொறுப்பும் விவேகமுமற்ற இத்தகைய நடவடிக்கைகளினால் எமது மக்களும் எமது கடந்த காலமும் சிதைந்ததை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.தற்போது நிலவிவரும் அமைதிச் சூழலைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

அப்படித் தக்க வைத்துக் கொண்டே அகரீதியாக உள்ள அரசியல் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் நாம் தீர்க்க முயற்சிக்க வேண்டும். இதுதான் புத்திசாலித்தனமான ஒரு நடவடிக்கையாகும்.

இதை நடைமுறைப்படுத்துவதை விட்டு விட்டு, காலாகாலமாக நீடித்து வரும் இனமுரண் உணர்வுகளைக் கிளறி, மக்களை திசைதிருப்பி மீண்டும் ஒரு நெருக்கடிகளுக்குள் தள்ளி விடுவதற்கே பெரும்பாலான தமிழ் அரசியற் சக்திகள் முயற்சிக்கின்றன.

இதனை பொறுப்புணர்வுடன் சிந்திப்பவர்கள் அனுமதிக்கக் கூடாது. அப்படி இந்தப் போக்கினை அனுமதித்தால் மீண்டும் பாரிய சேதங்களும் எதிர்விளைவுகளுமே ஏற்படும்.

அப்படி ஒரு நிலை உருவாகினால் மீண்டும் நாம் பலவிதமான நெருக்கடிகளில் சிக்கி, பேரபாயத்தையே சந்திக்க வேண்டிய நிலைமை உருவாகும். எத்தகைய நடைமுறைப் பிரச்சினைகளையும் சட்டரீதியான அணுகுமுறைக்கு ஊடாகவும் பொருத்தமான மனித உரிமைச் சட்டங்களுக்கு ஊடாகவும் தீர்வு காண்பதற்கான முயற்சிகளே இன்று எமக்கு அவசியமாகின்றது.

இதைக் குறித்து மக்கள் தெளிவாகவும் பொறுப்புணர்வோடும் சிந்திக்க வேண்டும். ஏனென்றால், எல்லா நெருக்கடிகளையும் அதன் முழுவிசையுடன் நீங்களே முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருப்பவர்கள்.

ஆனால், பிரச்சினைகளை உருவாக்குவோர் அந்தப் பிரச்சினைகள் உருவாக்கும் விளைவுகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வர். இதுவே கடந்த கால அனுபவம் என்பதை வரலாறு எமக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

ஆகவே எமது மக்கள் மிகவும் விழிப்புணர்வோடும் எச்சரிக்கையோடும் ஒவ்வொரு விடயங்களையும் அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## தரம்...

உயர்த்தப்பட்டுள்ளமையால் இனிவரும் காலங்களில் மக்களுக்கான சேவையை இன்னும் விரிவுபடுத்தி வழங்க முடியும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கமலேந்திரனுக்கு...

கமலேந்திரனுக்கு சட்டத்தரணி ஆஜராகியிருக்கவில்லை.


இதனையடுத்து சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை நீதவான் செ.லெனின்குமார் எதிர் வரும் 3 ஆம் திகதிவரை சந்தேகநபரை விளக்கமறியல் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ)

## திருமலையில்...

அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

திருகோணமலை நகரப் பிரதேசத்தில் அனுஷ்டிக்கப்படும் கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் காரணமாக திருகோணமலை நகரிலும் அண்மித்த பகுதிகளிலும் வழமை நிலை நேற்று பாதிக்கப்பட்டிருந்தது.

# கைப்பணி கலைஞர்களுக்கு சான்றிதழ்; அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் இடம்பெற்ற சுரேகும் மேல கைப்பணி கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட 74 கைப்பணித்துறை சார்ந்த கலைஞர்களுக்கும் இந்நிகழ்வு ஏற்பாட்டில் ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

மேற்படி கண்காட்சி 28 ஆவது தடவையாக நடைபெற்றுள்ளதுடன், இலங்கையைச் சேர்ந்த 74 கைப்பணி கைத்தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டு தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியதுடன் விற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, தேசிய அருங்கலை பேரவையின் தலைவர் புத்தி கீர்த்திசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விமானப்படை மீதான தாக்குதல் வழக்கின் ஆவணங்கள் மாயம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் ஏவுகணை தாக்குதல் நடத்தி விமானத்தில் பயணித்த 37 பாதுகாப்பு படையினரை கொலை செய்த சம்பவம் தொடர்பான வழக்கின், தடயங்கள் மற்றும் ஆவணங்கள் காணமால் போயுள்ளதாக நீதிமன்றத்தில் தெரியவந்துள்ளது.

2000 ஆம் ஆண்டு நடந்த இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

வழக்கில் ஆஜரான அரச சட்டத்தரணி, வழக்கு சம்பந்தப்பட்ட தடயங்களும், ஆவணங்களும் காணாமல் போயுள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தனக்கு அறிவித்துள்ளதாக கூறினார்.

வழக்குடன் சம்பந்தப்பட்ட தடயங்கள் மற்றும் ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து நீதிமன்றத்திற்கு அறியத் தருமாறு நீதிபதி ரேமா ஸ்வர்ணாதிபதி, அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் யூலை 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி, அன்றைய தினம் சம்பந்தப்பட்ட விடயம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

## சுதந்திரபுரத்தில்...

கொடுத்து உதவியிருப்பதாகவும், சுதந்திரபுரம், இருட்டுமடு பகுதி பொதுமக்களிடம் இருந்து தாங்கள் தேடி வருகின்ற கோபி என்ற இளைஞன் அங்கு மறைந்திருப்பதாகத் தகவல் கிடைத்ததையடுத்தே அந்தப் பகுதியில் நேற்று தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய கூறினார்.

## நவிப்பிள்ளையின்...

இலங்கை சம்பந்தமாகவோ அல்லது வேறு ஒரு நாடு சம்பந்தமாகவே விசாரணைகளை நடத்தும் உரிமை ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு கிடையாது.

அப்படியான அதிகாரங்கள் அவருக்கு வழங்கப்படவில்லை. அமெரிக்கா இந்த அதிகாரத்தை அவருக்கு வழங்க முயற்சித்து வருகிறது.

இதனால் அவருக்கு இருக்கும் அதிகாரங்கள் தொடர்பில் யோசனை ஒன்றைக் கொண்டு அதனை வெற்றிபெறச் செய்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை தொடர்பாக அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும், ஆணையாளரின் அதிகாரங்கள் தொடர்பில் யோசனையை நிறைவேற்றிக் கொண்டால், அமெரிக்கப் பிரேரணையினால் ஏற்படப் போகும் தாக்கங்களை குறைக்க முடியும்.

நவநீதம்பிள்ளையை மனித உரிமைப் பேரவையின் ஆணையாளராக நியமித்துள்ளதே பிரச்சினைக்குரிய விடயம். அவர் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஏற்கனவே சுமத்தியவர், அப்படியான ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்துள்ளமை நியாயமானதல்ல என்றார்.

# ஜனாதிபதி ஆணைக்குழு கிழக்கில் விசாரணை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில், காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் கிழக்கு மாகாணத் துக்கென நடைபெறும் விசாரணைகளின் முதலாவது அமர்வு நேற்றுக் காலை ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது.

மாவட்டத்தில் 416 முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளபோதும், அவற்றில் தெரிவு செய்யப்பட்ட 54 முறைப்பாட்டாளர்களிடமே நேரடியான விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டன. இன்றைய அமர்வில், ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பராணகம, ஆணையாளர்களான திருமதி மனோ ராமநாதன், திருமதி சுரஞ்சனா வித்தியரத்ன ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன், சட்ட அதிகாரிகளான சமிந்த அத்கோரல, துசித் முதலிகே ஆகியோரும் முறைப் பாடுகளைப் பதிவு செய்தனர். இன்றைய அமர்வுக்கு மட்டக் களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் யு.உதய சிறிதர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இன்று கோரளைப்பற்று வடக்கு, வாகரை, கோரளைப் பற்று தெற்கு, கிரான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக் கான விசாரணைகள் கிரானிலுள்ள றெஜி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், நாளை மண் முனை வடக்கு, மட்டக்களப்பு பிரதேச செயலகப் பிரிவுக்கான விசாரணைகள் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# தொண்டைமானாறில் தீப்பற்றி எரிந்தது வீடு



(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு வைரவர் கோயிலடியில் வீடு ஒன்றும் அதன் வேலிகளும் தீயில் எரிந்து அழிந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மகேந்திரம் லோகச் சந்திரன் என்பவரின் வீடே தீயில் எரிந்து அழிந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் வல் வெட்டித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இரண்டு துவிச்சக்கர வண்டிகள், வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் உட்பட பல ஆயிரக் கணக்கான ரூபா மதிப்புள்ள பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இதேவேளை, குறிப்பிட்ட வேலிப் பகுதியில் கட்டப்பட்டிருந்த இரு ஆடுகள் மற்றும் நாய் என்பன அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பியுள்ளன. (116)

# தெற்கில் அதிகரிக்கிறது தேர்தல் வன்முறை

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் குறித்த வன் முறைச் சம்பவங்களின் எண் ணிக்கை 898ஆக உயர்வடைந் துள்ளதென 'கபே' அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் 854 சம்பவங்கள் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியமை தொடர்பானது என கபே அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 44 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேல் மாகாணத்தில் 515 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. தென் மாகாணத்தில் 320 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

# வடக்கு கல்வி அபிவிருத்திக்கு நிதி

மலேசியாவின் கோலாலம் பூரில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களின் நலன்புரிச் சங்கம் வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்காக 5 மில்லியன் ரூபா பணத்தை அன்பளிப்புச் செய் துள்ளது.

இந்த நிகழ்வு பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் மகிந்த தம்மிட்டகே, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் பணத்தை கையளித்தார்.

பயங்கரவாதம் காரணமாக வடக்கில் மட்டுமல்லாது கிழக் கிலும் பாதிக்கப்பட்டிருந்த கல்வி செயற்பாடுகள் தற்போது வழமைக்குத் திரும்பி வருவதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் தெரிவித்துள்ளது. இந்த நிலைமையால், மேற்படி மாகாணங்களை சேர்ந்த இளைஞர், யுவதிகள் ஆசிரியர் நியமனங்களைப் பெற சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கற்பிக்கவும் கற்றல் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனவும் பாது காப்பு அமைச்சின் இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது. இந்த நிகழ்வில் சங்கத்தின் அதிகாரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் சிலர் கலந்து கொண்டனர்.

## விமானப்படைக்கு புதிய ஊடகப் பேச்சாளர்

விமானப் படையின் புதிய நிறைவேற்று ஊடக அதிகாரியாகவும் பேச்சாளராகவும் விங் கொமாண்டர் கிஹான் செனவிரட்ன பொறுப்பேற்றுள் ளார்.அவர் கடந்த 17 ஆம் திகதி தனது கடமைகளை ஏற்றுக்கொண்டார்.

கெடேட் அதிகாரியாக விமானப் படையில் இணைந்து கொண்ட கிஹான் செனவிரட்ன, 1992 ஆம் ஆண்டு அமெரிக்க விமானப்படை கல்லூரியில் ஆரம்ப பயிற்சிகளை பெற்றுள்ளார். இவர் கொழும்பு புனித ஜோசப் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப் பிடத்தக்கது.

# மாணவர்கள் கைகலப்பு

யாழ்.மனோகராச் சந்திக்கருகிலுள்ள தனியார் வகுப்பு நிலையத்திற்கு முன்னால் நேற்று பாடசாலை மாணவர் களின் குழுக்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டதுடன், அப்பகுதி மக்களினால் அந்த கைகலப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்துக்களின் போர் துடுப் பாட்டப் போட்டி வெள்ளிக் கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், யாழ். இந்துக் கல் லூரி பாடசாலை மாணவர்கள் பாண்ட் வாத்தியத்துடன் வீதியில் சென்றபோதே இக்கைலப்பு ஏற்பட்டுள்ளது.

# இலங்கை மீனவர்களுக்கு இன்று விடுதலை

இந்தியாவிலிருந்து விடுதலையாகும் இலங்கை மீனவர்கள் 25 பேரும் இன்று நடுக்கடலில் வைத்து ஒப்படைக்கப்படவுள்ளதாக யாழ். நீரியல்வளத் திணைக்கள பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இன்று காலை 11.00 மணியளவில் வடகடல் பகுதியில் வைத்து 25 மீனவர்களையும், 5 படகுகளையும் இந்தியா எம் மிடம் ஒப்படைப்பதற்கான அறிவித்தல் தமக்கு கிடைத்திருப் பதாகவும், அதற்கமைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துமீறி இந்தியக் கடல் எல்லைப் பகுதியில் மீன்பிடித்தனர் எனத் தெரிவித்து இந்திய கடலோரக் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மீனவர் களே விடுதலையாவதாக தெரி விக்கப்படுகின்றது. (இ)

# 53 தமிழக மீனவர்கள் ஏப்ரல் 2 வரை விளக்கமறியல்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பகுதியில் கடற்படையினரால் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப் பட்ட 53 மீனவர்களும் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தஞ்சாவூர், காரைக்கால், இராமநாதபுரம் பகுதிகளில் இருந்து இலங்கை கடல் எல் லைக்குள் அத்துமீறி மீன் பிடித் துக்கொண்டிருந்த 53 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட துடன், அவர்களது 13 படகுகளும் மீட்கப்பட்டிருந்த நிலையில் இவர்கள் நேற்று யாழ்.நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப் படைக்கப்பட்ட நிலையில் நேற்று மாலை இவர்கள் ஊர்காவற் றுறை நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட 53 மீன வர்களையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு ஊர் காவற்றுறை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார். (இ, 25)

# இரண்டு விக்கெட்டுக்களால் ஹொங்கொங் அணி வெற்றி



உலகக் கிண்ண 20 இற்கு 20 கிரிக்கெட் தொடரில் நேற்று இடம்பெற்ற ஹொங்ஹொங், பங்களாதேஷ் அணிக்களுக்கிடையிலான தகுதிச் சுற்றுப் போட்டியில் விளையாடிய ஹொங்கொங் அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 16.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய ஹொங்கொங் அணி 19.4 ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியடைந்துள்ளது. இதில் பங்களாதேஷ் அணி தோல்வியுற்ற போதும் சுப்பர் 10 தரத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

# பூசகர் வீட்டில் கைக்குண்டு மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குற் பட்ட புதுமண்டபத்தடி வீடொன் றிலிருந்து நேற்று மாலை கைக் குண்டொன்றை கைப்பற்றிய துடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ள தாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.கைது செய்யப் பட்டவர் புதுமண்டபத்தடி பிர தேசத்தை சேர்ந்த கோயில் பூச கரான தர்மரெட்ணம் சந்திரகு மார் (வயது - 28) அடையாளம் காணப்பட்டிருப்பதாக பொலி ஸார் கூறினர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையி லேயே மேற்படி பூசகரின் வீட் டைச் சோதனையிட்ட போது இந்தக் கைக்குண்டு மீட்கப்பட் டதாகவும் குறித்த நபரை நீதி மன்றில் ஆஜர்படுத்துவதற் கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

# அமைச்சர் கஜதீர போகம்பறை விஜயம்

(கொழும்பு)

பொது மக்களின் பார்வைக் காக திறந்து வைக்கப்பட்டிருக்கும் கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு சிறைச்சாலைகள் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று விஜயம் செய்தார்.

இச்சிறைச்சாலையை பார் வையிட வந்திருந்த பொதுமக்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார் இங்கு வருகை தந்திருந்த பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் நாட்டில் மரண தண்டனை கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, சிறைச் சாலை அத்தியட்சகர் திஸ்ஸ ஜயசிங்க உட்பட அதிகாரிகள் பலரும் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.